# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2053 / சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் / நவம்பர் 11 / 2022 November 11 /2022






## மாநில அரசின் நிதிக் கையிருப்பு வலுவாகவே உள்ளது

ஷா ஆலம்:-

டத்தோஸ்ரீ அஸ்மின் அலி மந்திரி புசாராக இருந்த காலத்தை விட தற்போது மாநில அரசின் நிதிக் கையிருப்பு வலுவாகவே உள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.கடந்த 2019 ஆம் ஆண்டில் அஸ்மின் மந்திரி புசாராக இருந்த போது மாநில அரசின் நிதிக் கையிருப்பு 210 கோடி வெள்ளியாக மட்டுமே இருந்ததாக அவர் சொன்னார்.

கடந்த 2018 இல் 80 கோடி வெள்ளி செலவினப் பற்றாக்குறையை நீங்கள் (அஸ்மின்) ஏற்படுத்தியதால், நிதிக் கையிருப்பு 210 கோடி வெள்ளியாக மட்டுமே இருந்தது. நாங்கள் 50 கோடி வெள்ளிக்கும் 60 கோடி வெள்ளிக்கும் குறையாமல் செலவிடுகிறோம் என அவர் தெளிவுபடுத்தினார். அவர் 210 கோடி வெள்ளியை மட்டும் கையிருப்பாக விட்டுச் சென்றார். ஆனால், மாநிலத்தின் நிதி 340 கோடி வெள்ளியாக உள்ளது. அஸ்மின் காலத்தை விட இது மிக அதிகமாகும் என்று சிலாங்கூர் மாநில ஹராப்பான் தலைவருமான அவர் தெரிவித்தார்.அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் கோம்பாக் தொகுதியில் டத்தோஸ்ரீ அஸ்மின் அலியை எதிர்த்து அமிருடின் ஷாரி போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சிலாங்கூர் மாநிலம் தற்போது நிதிக் கையிருப்பு உள்பட பொருளாதார மந்த நிலையை எதிர்நோக்கியுள்ளதாக கூறியதன் வழி அஸ்மின் தொகுதி மக்களிடம் பொய்யுரைத்துள்ளதாக அமிருடின் குற்றஞ்சாட்டினார். மாநில அரசின் உயர் அதிகாரியிடமிருந்து கிடைத்த தகவலின் பேரில் இந்த தகவலை தாம் கூறுவதாக அஸ்மின் கூறிய போதிலும் மாநில அரசு செயலாளரை அவர் தொடர்பு கொண்ட போது மாநில பொருளாதார தரவுகள் குறித்து எதுவும் கேட்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். மாநில அரசு செயலாளரை அஸ்மின் தொடர்பு கொண்ட போது நான் அவரின் அருகில் இருந்தேன் என்ற விஷயம் அவருக்கு தெரிய வாய்ப்பில்லை.

அந்த உரையாடலின் போது அஸ்மின் எந்த தரவையும் அரசு செயலாளரிடம் கேட்கவில்லை. அவர் மிகப்பெரிய பொய்யை நாட்டு மக்களிடமும் கோம்பாக் தொகுதி வாக்காளர்களிடமும் கூறுகிறார் என்றார் அவர். மாநிலத்தின் பொருளாதாரம் ஒருபோதும் சீர்குலையவில்லை என்றும் மாறாக, கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதாகவும் அவர் சொன்னார்.

## வெ. 40 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மிட்லண்ட்ஸ் தோட்ட தமிழ்ப்பள்ளி மாணவர் விடுதி




பக்கம் 4


ஹராப்பான் எனும் பொக்கிஷத்தை விடாமல் பாதுகாத்து, நம்மைப் போல் நாட்டுமக்கள் அனைவரும் முன்னேற நாம் எடுக்கும் முடிவே, சிறந்த விடிவாகும்!

அந்த வரிசையில் இந்தியர், குறிப்பாக ஏழை மாணவர்கள், கைவிடப்பட்ட குழந்தைகளின் மேம்பாட்டுக்காக மாநில அரசின் செயல்பாட்டில் இன்னும் ஒரு புதிய பரிமாணமாக , உரு வெடுத்துள்ளதே மிட்லண்ட்ஸ் தோட்ட தமிழ்ப்பள்ளிக்குஅருகில் 40 லட்சம் வெள்ளிகள் செலவில் கட்டப் பட்டுள்ள மாணவர் தங்கும் விடுதி. வரும் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்தவும் ஆண்டு மானியம் வழங்கப்படும்என்று மந்திரி புசார் அறிவித்துள்ளார்,

சமீபத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட இன்சான் காப்புறுதி திட்டம் ஆசியாவில் வேறு எந்த நாட்டிலும் அறிமுகப்படுத்தப் படாதது, மக்கள் மேம்பாட்டில் மாநில அரசுஎவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதன் அளவுக் கோளாக அமைந்துள்ளது.

# தனித்து வாழும் தாய்மார்களுக்கான திட்டங்களை முன்னெடுக்க மாநில அரசின் மானியம் உதவும்




சிப்பாங், அக் 31-
சிலாங்கூர் மாநில அரசினால் அமல்படுத்தப்பட்டுள்ள 5,000 வெள்ளி மானியத் திட்டம் மூலம் மகளிர் மற்றும் தனித்து வாழும் தாய்மார்களுக்கான திட்டங்களை முன்னெடுக்கும் வாய்ப்பினை அத்தரப்பினர் சார்ந்த அமைப்புகளுக்கு வழங்கும்.தங்கள் தொகுதியிலுள்ள தனித்து வாழும் தாய்மார்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக தொழில் முனைவோர் பயிற்சியை நடத்த தாங்கள் திட்டமிட்டுள்ளதாக லெம்பா ஜெயா தொகுதிக்கான பொருளாதார, சமூக நல மற்றும் மகளிர் அமைப்பின் தலைவர் நோரித்தா சே அலி கூறினார்.

கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் அமல்படுத்தப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக தனித்து வாழும் தாய்மார்களில் பலர் மனோ ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு தன்முனைப்பு பயிற்சியை வழங்குவது குறித்தும் தாங்கள் ஆலோசித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.தனித்து வாழும் தாய்மார்கள் மேம்பாட்டில் நாங்கள் அதிக கவனம் செலுத்துகிறோம். எங்களின் இந்த உதவி அவர்களுக்கு வழிகாட்டுதலையும் அதன் மூலம் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்குரிய வாய்ப்பினையும் வழங்கும் என நம்புகிறோம் என்று அவர் சொன்னார்.

தனித்து வாழும் தாய்மார்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டி வரும் மாநில அரசுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். மாநில அரசின் இந்த மானியம் முறையான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம் என்றார் அவர்.

முன்னதாக, இங்குள்ள கேஜபி கோத்தா வாரிசானில் நடைபெற்ற ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் நிகழ்வில் தனித்து வாழும் தாய்மார்களுக்கான மானியத்தை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி ஒப்படைத்தார்.

## கோம்பாக் தொகுதிக்கு அமிருடின் சரியான வேட்பாளர் என்பது சேவைத் திறன் வழி நிரூபணம்

### - ஆதரவாளர்கள் கருத்து

அம்பாங், அக் 30-
சிலாங்கூர் மந்திரி புசாராக கடந்த நான்கு ஆண்டுகளாக பணியாற்றியதன் மூலம் தனது திறமையை நிரூபித்துள்ள டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கோம்பாக் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடக் கூடிய சரியான வேட்பாளராக திகழ்கிறார் என்று கெஅடிலான் கட்சியின் ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

ஷெரட்டோன் நகர்வு மூலம் மக்களுக்கு துரோகமிழைத்த டத்தோஸ்ரீ முகமது அஸ்மின் அலியை தோற்கடித்து தொகுதியைக் கைப்பற்றுவதற்கான பிரகாசமான வாய்ப்பினை அமிருடின் கொண்டுள்ளதாக அம்பாங் பி.கே.ஆர். இளைஞர் பிரிவுத் தலைவர் முகமது இமான் ஹஸிக் ஹமிஸி (வயது 27) கூறினார்.

இரு வேட்பாளர்களுக்குமிடையிலான போட்டி மிகவும் கடுமையானதாக இருந்த போதிலும் கட்சியின் கொள்கைகளை நிறைவேற்றுவதில் கடப்பாடு கொண்ட வேட்பாளரையே கோம்பாக் மக்கள் தேர்ந்தெடுப்பர் என தாம் எதிர்பார்ப்பதாக அவர் சொன்னார்.

கோம்பாக் தொகுதியின் நிலவரத்தை நான் அணுக்கமாக கண்காணித்து வருகிறேன். நடப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மக்களின் நம்பிக்கைக்கு துரோகமிழைத்துள்ளார். துரோகிகள் விஷயத்தில் கோம்பாக் மக்கள் மிகவும் உணர்ச்சிப்பூர் வமானவர்களாக உள்ளனர் என்றார் அவர்.உண்மையைச் சொல்வதனால் தங்களுக்கு துரோகம் இழைத்த தலைவர்களை மக்கள் நிராகரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. கடந்த பொதுத் தேர்தலில் சுங்கை துவா தொகுதியில் அதிக பெரும்பான்மை வாக்குகளில் வெற்றி பெற்ற அமிருடின் கோம்பாக் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டது சரியான நடவடிக்கையாகும் என அவர் குறிப்பிட்டார்.



பக்கத்தான் ஆட்சியின் வீழ்ச்சிக்கு காரணமாக ஷெரட்டோன் நகர்வு விவகாரம் தவிர்த்து அமிருடினின் வயது, பணி நெறி போன்றவை கோம்பாக் மக்களின் தேர்வாக அவர் விளங்குவதற்கு காரணமாக திகழ்வதாக கோல லங்காட் பி.கே.ஆர். மகளிர் பிரிவு பொருளாளர் அஜிசா டின் (வயது 53) கூறினார்.

## அமிருடினை மக்கள் ஆதரிப்பதற்கு தன்னடக்கமும், பிரச்னைகளைத் தீர்க்கும் வல்லமையும் காரணம்



கோம்பாக், நவ 2-
டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் தன்னடக்கமும் பிரச்னைகளை எளிதில் தீர்க்கும் வல்லமையும் கோம்பாக் மக்கள் அவரை ஆதரிப்பதற்கான முக்கிய காரணங்களாக விளங்குகின்றன. சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்றதிலிருந்து அவர் அடிக்கடி களத்தில் இறங்கி பணியாற்றி வருவதாக சுங்கை துவா சட்டமன்றத் தொகுதியின் ஒருங்கிணைப்பாளர் ஏ.ரஹிம் காஸ்டி கூறினார்.

வெள்ளப் பிரச்னையை உதாரணமாகக் கூறலாம். அந்த பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக ஆறு மற்றும் கால்வாய்களை விரிவாக்கம் செய்யும் பணிக்கு அமிருடின் உத்தரவிட்டார். 80 விழுக்காடு பூர்த்தியடைந்துள்ள இப்பணியின் மூலம் வெள்ளப் பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்று அவர் சொன்னார்.அதோடு மட்டுமின்றி மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை அமல்படுத்துவதற்கும் மந்திரி புசார் உத்தரவிட்டார் என நேற்று இங்கு நடைபெற்ற ஜெலாஜா ஏசான் ராக்யாட் மலிவு விற்பனைத் திட்டத்தின் போது செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார். சுங்கை துவா சட்டமன்றத் தொகுதி வாக்காளர்கள் அமிருடினுக்கு ஆதரவளிப்பார்கள் என பெரிதும் எதிர்பார்க்கிறேன். அதே போல் உலு கிளாங் மற்றும் கோம்பாக் செத்தியா தொகுதி மக்களின் ஆதரவும் அவருக்கு கிட்டும் என்ற நம்பிக்கை உள்ளது என ரஹிம் சொன்னார்.

இப்பொதுத் தேர்தலில் கோம்பாக் தொகுதியில் டத்தோஸ்ரீ அஸ்மின் அலியை எதிர்த்து சிலாங்கூர் மந்திரி புசாரான அமிருடின் ஷாரி போட்டியிடுகிறார். ஷெராட்டான் நகர்வு மூலம் பக்கத்தான் ஹராப்பான் ஆட்சியைக் கவிழ்த்த கபடதாரி அஸ்மின் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமிருடின் கடும் உழைப்பாளி, பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வு காண்பவர்

### - கோம்பாக் மக்கள் புகழாரம்

கோம்பாக், நவ 1-
டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடும் உழைப்பாளி என்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வு காண்பவர் என்றும் கோம்பாக் தொகுதிவாசிகள் புகழாரம் சூட்டியுள்ளனர்.

மந்திரி பெசார் என்ற முறையிலும் சுங்கை துவா சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் அவர் சிறப்பான சேவை பின்னணியைக் கொண்டுள்ளார் என்று ஓய்வு பெற்ற பணியாளரான ரோஸ்லி பாபா (வயது 66) கூறினார்.

பிரச்னைகளை எதிர்நோக்கும் மக்களுக்கு விரைந்து வந்து தீர்வு காணும் தலைவராக அவர் விளங்குகிறார். இத்தொகுதி மக்களுக்கு அவர் பல வகைகளில் உதவியுள்ளார். இந்த கோம்பாக் தொகுதியில் அவர் போட்டியிடுவது சரியான நடவடிக்கையாகும் என்று ரோஸ்லி சொன்னார்.



இத்தேர்தலில் முதன் முறையாக வாக்களிக்கவுள்ள முகமது நிஸாம் ஹலிக் (வயது 23) என்ற இளைஞரும் இதே கருத்தைப் பிரதிபலித்தார். தொகுதி மக்களுக்கு குறிப்பாக கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் அமிருடின் பல்வேறு உதவிகளை நல்கியதாக அவர் குறிப்பிட்டார்.

பெருந்தொற்று பரவல் காலத்தில் மாநில அரசிடமிருந்து உணவுக் கூடைகளை பெற்றவர்களில் நாங்களும் அடங்குவோம். நெருக்கடியான அக்காலக்கட்டத்தில் அந்த உதவி எங்களுக்கு மிகவும் தேவையாக இருந்தது என்றார் அவர்.

அத்தொகுதியைச் சேர்ந்த மற்றொருவர் 31வயது ஜி.சந்திரனும் அமிருடினை பாராட்டிப் பேசினார். மாநில மந்திரி புசாரான அவர் வேலையைக் கண்டு அஞ்சி ஓடுபவரல்ல என்றும் குறிப்பிட்டார். அமிருடின் ஷாரியின் அர்ப்பணிப்பு உணர்வை நான் நேரில் கண்டுள்ளேன். பெருந்தொற்று சமயத்தில் நாங்கள் போராடிக் கொண்டிருந்த போது அவர் உணவுப் பொருள்களை விநியோகம் செய்ததோடு அனைவரும் கோவிட்-19 சோதனையை மேற்கொள்வதை உறுதி செய்தார் என சந்திரன் தெரிவித்தார்.

கோம்பாக் தொகுதியில் சேவையாற்றுவதற்கு தகுதியான வேட்பாளர் அமிருடினே எனக் கூறிய சந்திரன், வரும் பொதுத் தேர்தலில் அவர் வெற்றி பெறுவார் என தாம் பெரிதும் எதிர்பார்ப்பதாக சொன்னார்.



## ஹராப்பான் தேர்தல் கொள்கையறிக்கையில்,

# நாட்டைமேம்படுத்தி, நாட்டு வளத்தை மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகள்!

ஷா ஆலம், நவ 2–
வரும் 15வது பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நாட்டை ஆளும் பட்சத்தில் வாக்காளர்களுக்குப் பயன்தரக் கூடிய கவர்ச்சிகரமான 39 வாக்குறுதிகளைப் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி இன்று வெளியிட்டது.நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற நிரந்தரத் தவணைச் சட்டம், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் மற்றும் வேலை இழந்தவர்களுக்குச் சிறப்பு அலவன்ஸ் ஆகியவை மக்களைப் பெரிதும் ஈர்க்கக்கூடிய வாக்குறுதிகளில் சிலவாகும்.

பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியின் கொள்கையறிக்கையில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்களை https://kitaboleh.my/ என்ற அகப்பக்கம் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இந்தக் கொள்கையறிக்கையில் சில புதிய வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ள வேளையில் கடந்த 2018ஆம் ஆண்டு ஆட்சியில் அமர்ந்த போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் சில மேம்படுத்தப்பட்டுள்ளன.

### ஹராப்பான் கூட்டணி சில தலைப்புகளின் கீழ் வெளியிட்டுள்ள வாக்குறுதிகள் வருமாறு- வாழ்க்கைச் செலவின விவகாரத்தைக் கையாளுதல்

- உணவு விநியோகத் துறையில் போட்டி ஆற்றலை வலுப்படுத்துவதற்கும் கொள்ளை லாபத்தைத் தடுப்பதற்கும் ஏதுவாகக் கார்டல் எனப்படும் முறையற்ற வணிகக் கூட்டமைப்பு முறை அகற்றப்படும்
- உணவுப் பொருள் விநியோகம் குறிப்பாகப் பெருநாள் காலங்களில் சீராக இருப்பதை உறுதி செய்ய உற்பத்தியாளர்களுடன் ஒத்துழைப்பு ஏற்படுத்தப்படும்.
- விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்
- டோல் கட்டணத்தைக் குறைக்கவும் கட்டங்கட்டமாக அதனை அகற்றவும் நெடுஞ்சாலை ஒப்பந்தங்கள் மறுஆய்வு செய்யப்படும்.

### வறுமை ஒழிப்பு

- அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் வாழ்க்கைச் செலவின உதவியும் இலவசக் காலை உணவும் தொடர்ந்து வழங்கப்படும்
- கட்டுப்படி விலை வீட்டுடமைத் திட்டம், கட்டுப்படி வாடகை வீட்டுத் திட்டம், மலிவு விலை மற்றும் நடுத்தர மலிவு விலை வீட்டுடமைத் திட்டம் மற்றும் டிரான்சிட் திட்டம் உருவாக்கப்படும் தொழிலாளர் நலனுக்கு உத்தரவாதம்
- உயர்ந்த வருமானம் கொண்ட நாடாக உயர்த்தும் இலக்கிற்கேற்பக் குறைந்த பட்சம் சம்பளக் கொள்கை அமலாக்கம் செய்யப்படும்
- வேலை இழந்த தொழிலாளர்களுக்கான சிறப்பு அலவன்ஸ் திட்டம் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படும்
- தொழிலாளர் சேம நிதி வாரியம், பெர்காசா ஐ-சரஹான் மற்றும் மூன்றாம் தரப்பு சந்தா செலுத்தும் முறை இயல்பாகப் பதிவு செய்யப்படுவது நடைமுறைப்படுத்தப்படும்

### இளைஞர்களின் பொருளாதார வாய்ப்புகள் வலுப்படுத்தப்படும்

- தேசிய உயர் கல்வி நிதிக் கழகத்தின் கடனுதவி அடிப்படையில் பி40 தரப்பு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்படும்

### மகளிர் மற்றும் குடும்ப அமைப்பு முறை வலுப்படுத்தப்படும்

- வேலைக்குச் செல்லும் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினர் மற்றும் நடுத்தரத் தரப்பைச் சேர்ந்த மகளிருக்குக் குழந்தை பராமரிப்புக்காக உதவித் தொகை வழங்கப்படும்.

### வயதான காலத்தில் சௌகரிய வாழ்க்கை

- நூறு வெள்ளிக்கான ஷோம் ஷோப்பிங் பற்றுச்சீட்டு, 1,000 வெள்ளி மரணச் சகாய நிதி மற்றும் உள்நாட்டு சுற்றுலா மையங்களுக்கு இலவசப் பஸ் சேவை வழங்கப்படும்

### ஊழல் ஒழிப்பு

- மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தின் ஆணையர் பதவிக்கான நியமனம் இரு கட்சி நாடாளுமன்றச் சிறப்பு தேர்வுக் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்

### அரசு நிர்வாகத்தில் உயர்நெறியைப் பேணுதல்

- பிரதமர், அமைச்சர்கள், மந்திரி புசார்கள் மற்றும் முதலமைச்சர்களின் பதவி காலம் கூடுதல் பட்சம் 10 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்படும்
- நாடாளுமன்றமும் சட்டமன்றமும் தவணை காலம் முடிந்த பின்னரே கலைக்கப்படும் வகையில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தவணை நிரந்தரச் சட்டம் இயற்றப்படும்

### சுகாதாரச் சீர்திருத்தம்

- அடுத்த ஐந்தாண்டுகளில் சுகாதாரத்திற்கான செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்து விழுக்காடாக உயர்த்தப்படும்
- மைசலாம் பாதுகாப்புத் திட்டம் நடுத்தர வருமானம் கொண்ட (எம்40) தரப்பினருக்கும் விரிவுபடுத்தப்படும்.

### கல்விச் சீர்திருத்தம்

- தேவைப்படும் அனைத்துத் தரப்பினருக்கும் வழங்குவதற்கு ஏதுவாகக் காலைச் சிற்றுண்டித் திட்டத்திற்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்
- கடந்த 2020 மற்றும் 2021 கோவிட்-19 காலக்கட்டத்தில் அமல்படுத்தப்பட்ட வீட்டிலிருந்து கல்வி கற்கும் கொள்கை காரணமாக உண்டான 3எம் (எண், எழுத்து,வாசிப்பு) ஆற்றலை மேம்படுத்துவதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கப்படும்
- தேசிய உயர்கல்விக் கடனுதவி நிதிக் கழகத்தின் (பி.டி.பி.டி.என்.) கடன் தொடர்பில் ஏழைகள் மற்றும் பி40 தரப்பை இலக்காகக் கொண்ட மன்னிப்பு திட்டம் அமல் படுத்தப்படும்

### விளையாட்டு பொருளாதாரத்திற்குப் புத்துயிர்

- கொள்கைகள் மற்றும் மாற்றங்கள் தொடர்பான விவாதங்கள் வாயிலாக மின்-விளையாட்டு சூழியல் முறை மேம்படுத்தப்படும் மலேசிய மக்களின் மக்களின் சுபிட்சம் மற்றும் போட்டித் தன்மை உறுதி செய்யப்படும்
- சமூகப் பொருளதார மேம்பாட்டிற்காக அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் பொது நிதியைத் தவறாகப் பயன் படுத்துத்துதல் போன்ற செயல்களை விசாரிக்க அரச விசாரணை ஆணையம் அமைக்கப்படும்

### சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியாவுக்கிடையிலான மேம்பாட்டு இடைவெளி குறைக்கப்படும்

- சபா மற்றும் சரவாக் மாநிலங்களைப் பிரதிநிதித்து ஒருவர் உள்பட இரு துணைப் பிரதமர்கள் பதவி உருவாக்கப்படும் 1963ஆம் ஆண்டு மலேசிய ஒப்பந்த அமலாக்கம் வாயிலாகச் சபா மற்றும் சரவாக் பிரதேசம் மேம்படுத்தப்படும்
- நாடாளுமன்ற உறுப்பினர்களில் 35 விழுக்காட்டினர் சபா மற்றும் சரவாக் மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பது உறுதி செய்யப்படும்

சபா மற்றும் சரவாக் மாநிலங்களுக்கு அதிகாரம் பரலாக்கப்படும்

- மத்திய, மாநில அரசு துறைகளில் குறிப்பாக மேல் மட்டத்தில் 70 விழுக்காட்டு வேலை வாய்ப்பு சபா மற்றும் சரவாக் மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படும்.



# சிலாங்கூரில் ஹராப்பான் சார்பில் 22 வேட்பாளர்கள் போட்டி

## ஐவர் இந்தியர்கள்

ஷா ஆலம், நவ 1-

வரும் பதினைந்தாவது பொதுத் தேர்தலில் சிலாங்கூர் மாநிலத்தின் 22 நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடவுள்ள பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி வேட்பாளர்களின் பெயர்களை அக்கூட்டணி வெளியிட்டுள்ளது.கெடிலான், அமானா மற்றும் ஜசெக, மூடா ஆகிய மூன்று கட்சிகளைப் பிரதிநிதித் அவர்கள் இத்தேர்தலில் களம் காணவுள்ளனர். இத்தேர்தலில் கெஅடிலான் கட்சி மிக அதிகமாக அதாவது 11 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அமானா கட்சி ஆறு தொகுதிகளிலும் ஜசெக நான்கு தொகுதிகளிலும் மூடா கட்சி ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன.பக்கத்தான் கூட்டணி சார்பில் சிலாங்கூர் மாநிலத்தில் ஐந்து இந்திய வேட்பாளர்கள் களம் காண்கின்றன. அவர்களில் மூவர் பிகேஆர் கட்சியையும் இருவர் ஜசெகவையும் பிரதிநிதிக்கின்றனர்.

### நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் ஹராப்பான் வேட்பாளர்கள் பட்டியல் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| சபாக் பெர்ணம்- சம்சுல் மாரிஃப் இஸ்மாயில் | (அமானா) | பூச்சோங்- இயோ பீ இன் | ( ஜசெக) |
| சுங்கை பெசார்- சைபோல்யாசான் மாட் யூசுப் | (பிகேஆர்) | சுபாங்- வோங் சென் | (பிகேஆர்) |
| உலு சிலாங்கூர்- டாக்டர் சத்தியபிரகாஷ் நடராஜன் | (பிகேஆர்) | பெட்டாலிங் ஜெயா- லீ சியோன் சுங் | (பிகேஆர்) |
| தஞ்சோங் காராங்- சித்தி ராஹ்யு பாஹ்ரின் | (மூடா) | டாமன்சாரா- கோபிந்த் சிங் டியோ | (ஜசெக) |
| கோல சிலாங்கூர்- டாக்டர் ஜுல்கிப்ளி அகமது | (அமானா) | சுங்கை பூலோ- ரமணன் ராமகிருஷ்ணன் | (பிகேஆர்) |
| செலாயாங்- வில்லியம் லியோங் | (பிகேஆர்) | ஷா ஆலம்- அஸ்லி யூசுப் | (அமானா) |
| கோம்பாக்- டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி | (பிகேஆர்) | காப்பார்- அப்துல்லா சானி | (பிகேஆர்) |
| அம்பாங்- ரோட்சியா இஸ்மாயில் | (பிகேஆர்) | கிள்ளான்- வீ.கணபதிராவ் | (ஜசெக) |
| பாண்டான்- ரபிஸி ரம்லி | (பிகேஆர்) | கோத்தா ராஜா- முகமது சாபு | (அமானா) |
| உலு லங்காட்- முகமது சானி ஹம்சான் | (அமானா) | கோல லங்காட்- மணிவண்ணன் கோவின் | (பிகேஆர்) |
| பாங்கி- ஷியோர்ட்ஸான் ஜோஹான் | ( ஜசெக) | சிப்பாங்- ராஜ் முன்னி@அய்மான் அதிரா | (அமானா) |

# 40 லட்சம் வெள்ளிகள் செலவில் கட்டப்பட்டுள்ள மிட்லண்ட்ஸ் தோட்ட தமிழ்ப்பள்ளி மாணவர் விடுதி

முதல் பக்கத் தொடர்ச்சி...

**பக்காத்தான் ஹராப்பான் சிலாங்கூர் மாநில அரசு, மாநில அதிகார வரம்புக்கு உட்பட்ட ரீதியில் மக்களின் நல்வாழ்வுக்காக பல சமூக ரீதியான மேம்பாடு மற்றும் மக்கள் நலன் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.**

இருப்பினும் மக்களுக்கு கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற சேவைகளை வழங்குவது மத்திய அரசின் கடப்பாடு என ஒதுங்கிக் கொள்ளாமல் தொடர்ந்து பல பணிகளை செய்து வருகிறது. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இன்சான் காப்புறுதி திட்டம் உலகில் வேறு எந்த நாட்டிலும் அறிமுகப்படுத்தப் படாதது, மக்கள் மேம்பாட்டில் மாநில அரசு எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதன் அளவுக் கோளாக அமைந்துள்ளது.

அதன் படி பிறந்து 30 நாள் முதல் 80 வயதுக்குள் ஒருவர் இயற்கை அல்லது விபத்தில் மரணமுற்றால் அல்லது அவர் உடல் முற்றாக செயலிழந்தால் அவர் குடும்பத்துக்கு 10,000 ஆயிரம் வெள்ளி காப்புறுதியை வழங்கும் திட்டம். இதற்கு, சிலாங்கூரில் பிறந்தவராகவோ அல்லது வாக்காளராகவோ அல்லது அவர்களின் 18 வயதுக்கு கீழ் பட்ட பிள்ளைகளாக இருக்க வேண்டும்.

அந்த வரிசையில் பல மக்கள் நல திட்டங்களை அடுக்கி கொண்டே போகலாம். இருப்பினும் இந்திய சமுதாயத்தினர் பரம ஏழைகள் , இந்த நாட்டின் வளர்ச்சிக்கு அவர்களின்

உழைப்பும் அர்ப்பணிப்பும் பெரும் உதவியாக இருந்துள்ளதை மனதில் கொண்டு பக்காத்தான் ஹராப்பான் சிலாங்கூர் மாநில அரசு இந்திய சமுதாய மேம்பாட்டிற்கு இரண்டு முக்கிய முன்னெடுப்புகளை அமல்படுத்தி வருவதை இந்தியர்கள் நன்கு அறிவார்கள்.

கல்வி மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் இந்தியர்களுக்கு உதவ ஹிஜ்ரா கடன் உதவி, ஹிஜ்ரா தொழில் முனைவோர் மேம்பாட்டு நிதி, ஹிஜ்ரா தொழில் முனைவோர் பயிற்சி பட்டறை, ஹிஜ்ரா தொழில் முனைவோர் வணிக மேம்பாடு, ஹிஜ்ரா தொழில் முனைவோர் உபகரண உதவி திட்டம், ஐ-சீட் கடனுதவி, ஐ -சீட் தொழில் முனைவோர் உபகரண உதவி திட்டம், மகளிர் மற்றும் இளைஞர் விவசாய மற்றும் தொழில் பயிற்சி திட்டம். அது தொடர்பான இலவச ஆறு மாதம் முதல் 1 ஆண்டுவரையிலான தொழில்நுட்ப பயிற்சி படிப்பு என பலவற்றை இம்மாநில அரசு ஏற்படுத்தி நடத்தி வருகிறது.

அந்த வரிசையில் இந்தியர், குறிப்பாக ஏழை மாணவர்கள், கைவிடப்பட்ட குழந்தைகளின் மேம்பாட்டுக்காக மாநில அரசின் செயல் பாட்டில் இன்னும் ஒரு புதிய பரிமாணமாக , உரு வெடுத்துள்ளதே மிட்லண்ட்ஸ் தோட்ட தமிழ்ப்பள்ளிக்கு அருகில் 40 லட்சம் வெள்ளிகள் செலவில் கட்டப் பட்டுள்ள மாணவர் தங்கும் விடுதி.

வரும் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்தவும் ஆண்டு மானியம் வழங்கப்படும் என்று மந்திரி புசார் அறிவித்துள்ளார், இன்றைய சிலாங்கூர் மந்திரி புசாராக இருக்கும் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி உணர்வுபூர்வமாக இந்தியர்கள் மீது அதிக அக்கறையும் மதிப்பும் கொண்டவர் என்பதற்கு சான்று.

பார்ப்பவர்களை பரவசப்படுத்தும் இத்திட்டத்தை கொண்டு வந்த பக்காத்தான் அரசு இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த 50 ஆண்டுக்கு பிறகு மலர்ந்ததை நினைத்து வேதனை அடைபவர்கள் பலர். இந்த ஆட்சி மாற்றத்தை நம் முன்னோர்கள் 70ம் அல்லது 80ம் ஆண்டுகளில் ஏற்படுத்தியிருந்தால், இன்று நாம் அனுபவிக்கும் பல இன்னல்களில் இருந்து விடுபட்டிருப்போம் என்ற ஏக்க பெருமூச்சு விடுகின்றனர் வேறு சிலர்.. ஆனால் கைக்கு எட்டிய ஹராப்பான் எனும் பொக்கிஷத்தை விடாமல் பாதுகாத்து, நம்மைப் போல் நாட்டுமக்கள் அனைவரும் முன்னேற நாம் எடுக்கும் முடிவே, சிறந்த விடிவாகும் !

# பெர்மாத்தாங் தொகுதியில் 337 பேருக்கு மாதம் வெ.300 உதவித் தொகை



ஷா ஆலம்:-

சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டத்தின் கீழ் (பிங்காஸ்) பெர்மாத்தாங் தொகுதியைச் சேர்ந்த 337 பேர் ஆண்டுக்கு 3,600 வெள்ளி உதவித் தொகையைப் பெறுகின்றனர்.

மாதம் 300 வெள்ளி உதவித் தொகையைப் பெறுவோரில் பெரும்பாலோர் புதியவர்கள் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பின்ர ரோஸானா ஜைனால் அபிடின் கூறினார்.

இந்த உதவித் திட்டத்திற்கு மொத்தம் 1,500 விண்ணப்பங்கள் கிடைத்தன. எனினும் பெர்மாத்தாங் தொகுதிக்குவழங்கப்பட்ட ஒதுக்கீடு 337 மட்டுமே. இத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் 10 விழுக்காட்டினர் கிஸ் எனப்படும அன்னையர் பரிவுத் திட்ட பயனாளிகள் ஆவர் என அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தில் சிலாங்கூர் மாநிலத்தின் வடபகுதி மாநிலங்களுக்கு கூடுதல் வாய்ப்புகள் வழங்கப்படும் எனத் தாம்எதிர்பார்ப்பதாக அவர் மேலும் சொன்னார்.

மொத்தம் 10 கோடியே 80 லட்சம் வெள்ளி நிதி ஒதுக்கீட்டில் கடந்த ஜூன் மாதம் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின் வழி மாநிலத்திலுள்ள சுமார் 80,000 பேர் பயன் பெறுவர் என எதிர்பார்க்கப் படுகிறது. 300 பேர் இலவச காப்புறுதித் திட்டத்தில் பதிவு இந்த தொகுதியைச் சேர்ந்த 300 பேர் சிலாங்கூர் பொது காப்புறுதி திட்டத்தில் (இன்சான் இதுவரை பதிவு செய்துள்ளனர். இத்திட்டத்தில் மேலும் அதிகமா னோர் பதிவு செய்தவதற்கு ஏதுவாக தொகுதி நிலையில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளில் இந்த காப்புறுதி திட்டத்திற்காக பிரத்தியேக முகப்பிடங்கள் திறக்கப்படும் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ரோசான ஜைனால் அபிடின் கூறினார்.

பலர் சொந்தமாகவும் இணையம் வாயிலாகவும் இந்த திட்டத்தில் பதிவு செய்துள்ளனர். எனது கணிப்பின்படி இத்திட்டத்திற்கு பதிவு செய்தவர்கள் எண்ணிக்கை 300 பேர் வரை இருக்கும் என அவர் சொன்னார். இந்த காப்புறுதி திட்டத்தில் பதிவு செய்வதற்கான வழி முறைகளை பொதுமக்களுக்கு சொல்லித் தருவதன் மூலம் அவர்களுக்கு உதவ விரும்புகிறோம் என்றார் அவர்.

இம்மாதம் 23ஆம் தேதி கிள்ளான், சுல்தான் சுலைமான் அரங்கில் நடைபெற்ற கிள்ளான் மாவட்ட நிலையிலான ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் நிகழ்வின் போது இந்த இன்சான் காப்புறுதி திட்டத்தை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைத்தார்.

இந்த இலவச காப்புறுதி திட்டத்தின் மூலம் மாநிலத்திலுள்ள சுமார் 60 லட்சம் பேர் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்திற்கு உண்டாகும் செலவை மாநில அரசு முழுமையாக ஏற்றுக் கொள்ளும். கடந்த அக்டோபர் 1 முதல் தேதி இந்த காப்புறுதி திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை 40,000 பேர் பதிவு செய்துள்ளதாகவும் ஆண்டு இறுதிக்குள் பத்து லட்சம் பேரை இத்திட்டத்தில் சேர்க்க நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் மந்திரி புசார் சொன்னார்.



## "மீண்டும் பள்ளிக்குச் செல்வோம்" உதவித் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்

### எம்.பி.ஐ. அறிவிப்பு

ஷா ஆலம், அக் 31-

தொடக்கப் பள்ளி மாணவர்களை இலக்காக கொண்ட மந்திரி புசார் கட்டமைப்பின் (எம்.பி.ஐ.) "மீண்டும் பள்ளிக்குச் செல்வோம்" உதவித் திட்டத்திற்கு நாளை முதல் விண்ணப்பிக்கலாம்.தகுதி உள்ள மாணவர்களுக்கு தலா 100 வெள்ளி உதவித் தொகை வழங்கும் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொகுதியிலும் 300 மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதாக எம்.பி.ஐ. நிறுவன கடப்பாட்டுப் பிரிவுத் தலைவர் அகமது அஸ்ரி ஜைனா நோர் கூறினார். தாங்கள் சார்ந்துள்ள தொகுதி அலுவலகங்களில் இதற்கான விண்ணப்பத்தை வரும் நவம்பர் இறுதி வரை செய்யலாம் என்றும் நிதியை பகிர்ந்தளிக்கும் பணி டிசம்பர் மாத தொடக்கத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சொன்னார்.

சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டம், யாயாசான் வாரிசான் அனாக் சிலாங்கூர் திட்டம் அல்லது சிலாங்கூர் ஸக்கத் அறவாரியம் ஆகியவற்றின் மூலம் உதவி பெறாதவர்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கவுள்ளோம் என்று அவர் குறிப்பிட்டார்.இந்த திட்டத்திற்கு விண்ணப்பம் செய்வதற்கு மாதச் சம்பளம் 2,500 வெள்ளிக்கும் குறைவாக இருக்க வேண்டும் என முன்பு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த சம்பள வரம்பு 4,000 வெள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

## கிள்ளானில் வடிகால் மற்றும் வெள்ளப் பிரச்னைக்கு முன்னுரிமை

ஷா ஆலம்:-

வரும் 15வது பொதுத் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் கிள்ளான் தொகுதியில் நிலவும் வடிகால் மற்றும் வெள்ளப் பிரச்னைக்கு தீர்வு காண்பது தனது தலையாயப் பணியாக இருக்கும் என்று அத்தொகுதி வேட்பாளரான வீ.கணபதிராவ் கூறினார்.



இத்தொகுதி மக்கள் வெள்ளம், சாலை மற்றும் வடிகால் பிரச்னைகளை நீண்ட காலமாக எதிர்நோக்கி வருவதாக நடப்பு கோத்தா கெமுனிங் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான அவர் தெரிவித்தார்.

நான் பூலாவ் இண்டா சென்றேன். அங்குள்ள மக்கள் வெள்ளப் பிரச்னையை எதிர்நோக்கி வருவதை கண்டேன். இவ்விவகாரத்திற்கு தீர்வு காண்பதற்கு சிலாங்கூர் மாநில வடிகால் மற்றும் நீர்பாசனத் துறை மற்றும், கோலக்கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிஸாம் ஜமான் ஹூரி ஆகியோரைத் தொடர்பு கொண்டுள்ளேன் என ஜசெக வேட்பாளரான அவர் குறிப்பிட்டார். இப்பிரச்னைக்கு நீண்டகால அடிப்படையில் தீர்வு காணும் பொருட்டு அடிப்படை வசதிகள் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிமை தொடர்பு கொண்டேன். அவரும் இப்பகுதியில் நிலவும் பிரச்னைக்கு உடனடித் தீர்வு காண வாக்குறுதியளித்துள்ளார் என்றார் அவர்.

வரும் பொதுத் தேர்தலில் கிள்ளான் தொகுதியை பக்கத்தான் ஹராப்பான் தக்க வைத்துக் கொள்ள முடியும் எனத் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் சமூக நலத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினரான கணபதிராவ் சொன்னார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்பான சேவை மற்றும் சிலாங்கூரில் பக்கத்தான் கூட்டணியின் வலுவான கோட்டை என்ற அடிப்படையில் கிள்ளான் தொகுதியை வரும் தேர்தலில் தக்க வைத்துக் கொள்ள இயலும் என நம்புகிறேன் என அவர் குறிப்பிட்டார்.

கடந்த 14வது பொதுத் தேர்தலில் கிள்ளான் தொகுதியில் சார்ல்ஸ் சந்தியாகோ 78,773 வாக்குகள் பெரும்பான்மையில் வெற்றி பெற்றார்.

## வெள்ளத்தைத் தடுக்க கிள்ளான் ஆற்றை ஆழப்படுத்தும் பணி தொடக்கம்

ஷா ஆலம்:-

வெள்ளப் பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியாக கிள்ளான் ஆற்றின் 56 கிலோ மீட்டர் பகுதியை ஆழப்படுத்தும் மற்றும் அகலப்படுத்தும் பணி தொடங்கி கட்டங் கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளது.சுமார் 70 கோடி வெள்ளி செலவில் மேற்கொள்ளப்படும் நான்கு பிரிவுகளைக் உள்ளடக்கிய இந்த திட்டம் அடுத்த ஐந்தாண்டுகளில் பூர்த்தியாகும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

முதல் கட்டமாக தாமான் ஸ்ரீ மூடா குடியிருப்பையொட்டிய 10 கிலோ மீட்டர் பகுதியில் ஆற்றை மூன்று மீட்டர் அளவுக்கு ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும் என்று அவர் சொன்னார்.இந்த திட்டத்தின் வாயிலாக வெள்ள அபாயத்தை எதிர்நோக்கி வரும் தாமான் ஸ்ரீ மூடா, புக்கிட் லஞ்சோங், கம்போங் தெங்கா மற்றும் கம்போங் பாரு ஐக்கோம் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் 500,000 பேர் பயனடைவர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.எம்.பி.ஐ. எனப்படும் மந்திரி புசார் கட்டமைப்பு மற்றும் லண்டாசான் லுமாயான் நிறுவனம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் ஆண்டு இறுதிக்குள் 20 முதல் 30 விழுக்காடு வரை பூர்த்தியாகும் என்றார் அவர்.இங்கு ஆற்றை ஆழப்படுத்தும் திட்டத்தை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.கோலாலம்பூரின் மிட்வேலி தொடங்கி கோலக் கிள்ளான் வரையிலான பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஆற்றை ஆழப்படுத்தும் திட்டத்தின் மூலம் ஆற்றில் நீரின் கொள்ளளவை அதிகரிக்கவும் அதன் மூலம் வெள்ளப் பிரச்னையை குறைக்கவும் இயலும் என அவர் சொன்னார்.

# வீடு வாங்குவோருக்கு முன்பணம்

## 2023 பட்ஜெட்டில் புதிய திட்டம் அறிவிக்கப்படும்

சிப்பாங்:-

குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு வீடு வாங்குவதற்கான முன்பணம் வழங்குவது தொடர்பான திட்டம் வரும் 2023 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படவுள்ளது.

அதிகமானோர் சொந்த வீட்டைப் பெறுவதற்கு உதவும் நோக்கில் மாநில அரசு மேற்கொண்டு வரும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த திட்டம் அமைவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

வரும் நவம்பர் 25ஆம் தேதி தாக்கல் செய்யப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் இதன் தொடர்பான அறிவிப்பை வெளியிடவுள்ளோம். வீடு வாங்குவோர் முன்பணம் பெறுவதற்கான உதவியை நாங்கள் வழங்குவோம் என அவர் குறிப்பிட்டார்.



முன்பு வீட்டை தயார் செய்வதில் நாம் பிரச்னையை எதிர்நோக்கினோம். இப்போது அப்பிரச்னைக்கு தீர்வு கண்டு 30,000 முதல் 60,000 வீடுகளை தயார் செய்து விட்டோம். இப்போது வீட்டிற்கான முன்பணம் செலுத்துவதில் பிரச்னை ஏற்பட்டுள்ளது. ஆகவே பொதுமக்கள் சொந்த வீட்டைப் பெறுவதற்கு ஏதுவாக முன்பணம் தொடர்பான விஷயத்தில் உதவ விரும்புகிறோம் என்றார் அவர்.

நேற்று இங்கு ரூமா இடாமான் மெலோர் வீடமைப்பு த் திட்டதை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கூட்டம் வரும் நவம்பர் 23 ஆம் தேதி தொடங்கவுள்ளது. இரு தினங்களுக்குப் பின்னர் அதாவது 25 ஆம் தேதி 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

# இலவச குடிநீர் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்ய

## பொது மக்களுக்கு வேண்டுகோள்

ஷா ஆலம், நவ 1-

மாதம் 20 கனமீட்டர் நீரை இலவசமாக பெறுவதற்கு வகை செய்யும் ஆயர் டாருள் ஏசான் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யும்படி சிலாங்கூர் மாநில மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.இதற்கான விண்ணப்பங்களை வரும் 2024ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதி வரை எனும் www.airselangor.com எனும் அகப்பக்கம் வாயிலாக சமர்ப்பிக்கலாம் என்று மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.பக்கத்தான் ஹராப்பான் தலைவர்களின் தலைமைத்துவத்தில் சிலாங்கூர் மக்கள் பல்வேறு அனுகூலங்களை பெற்று வருகின்றனர். அவற்றில் மக்களுக்கு மிகவும் அத்தியாவசியத் தேவையாக கருதப்படும் இலவச குடிநீர்த் திட்டமும் ஒன்றாகும் என அவர் தனது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது 300,000 லட்சத்திற்கும் மேற்பட்ட சிலாங்கூர் மக்கள் இந்த இலவச குடிநீர்த் திட்டத்தின் வழி பயன்பெற்று வருவதாகவும் மேலும் 100,000 பேர் இத்திட்டத்தின்



மூலம் பயன்பெறுவதற்குரிய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாண்டு தொடங்கி இலவச குடிநீர் திட்டத்தில் பங்கு பெறுவதற்கான வருமான வரம்பு 4,000 வெள்ளியிலிருந்து 5,000 வெள்ளியாக உயர்த்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு உண்டாகும் 3 கோடி வெள்ளி செலவை மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது என்றார் அவர்.இந்த டாருள் ஏசான் இலவச நீர் விநியோகத் திட்டத்தில் பங்கு பெறுவதற்கான நிபந்தனைகள் வருமாறு-

சிலாங்கூரில் வசிக்கும் மலேசிய பிரஜையாக இருக்க வேண்டும்.மாத குடும்ப வருமானம் 5,000 வெள்ளிக்கும் குறைவாக இருக்க வேண்டும்.தனி மீட்டர் கொண்ட குடியிருப்பாக இருக்க வேண்டும்.ஒருவர் ஒரு குடியிருப்புக்கு அல்லது ஒரு மீட்டர் கணக்கிற்கு மட்டுமே விண்ணப்பம் செய்ய முடியும்.



# சுபாங் ஜெயா மாநகர் மன்ற ஏற்பாட்டில் நவீன விளையாட்டுத் தொகுதி நிர்மாணிப்பு

சுபாங் ஜெயா:-

சுபாங் ஜெயா மாநகர் மன்றம் 1 கோடியே 62 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளி செலவில் அதிநவீன விளையாட்டு தொகுதியை தாமான் வாவாசான் பண்டார் பாரு பூச்சோங்கில் நிர்மாணிக்கிறது.அனைத்துலக தரத்திலான புட்சால் திடலுடன் கூடிய இந்த விளையாட்டுத் தொகுதி 4.31 ஏக்கர் பரப்பளவில் நிர்மாணிக்கப்படுவதாக டத்தோ பண்டார் டத்தோ ஜோஹாரி அனுவார் கூறினார். இந்த அதிநவீன விளையாட்டுத் தொகுதி ஃபீபாவினால் அங்கீகரிக்கப்பட்ட பரப்பளவில் புட்சால் திடல் உள்ளிட்ட வசதிகளையும் 1,018 பேர் அமரும் அளவுக்கு இருக்கைகளையும் கொண்டிருக்கும். இந்த விளையாட்டுத் தொகுதி வரும் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பூர்த்தியாகும் என்று அவர் சொன்னார்.அனைத்துலகத் தரத்திலான புட்சால் அரங்கை நிர்மாணிக்கும் ஒரே ஊராட்சி மன்றமாக சுபாங் ஜெயா மாநகர் மன்றம் விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.முன்னதாக, ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் விளையாட்டுத் தொகுதியின் கட்டுமானப் பணிகளை இன்று தொடக்கி வைத்தார்.

# சங்கங்கள், அரசு சாரா அமைப்புகளுக்கு வெ.20 லட்சம் மானியம்

## சிலாங்கூர் அரசு வழங்கியது



ஷா ஆலம்:-

சமூகப் பணிகளை மேற்கொள்ளும் சங்கங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு (என்.ஜி.ஓ.) உதவ மாநில அரசு 20 லட்சம் வெள்ளிக்கு மேற்பட்ட தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது.சமூக நல தன்னார்வலர் நிதி, சினர்ஜி பெரிஹாத்தின் திட்டம் மற்றும் புசாட் கெபஜிக்கான் லெஸ்தாரி ஆகிய திட்டங்கள் வாயிலாக இந்த மானியம் வழங்கப்படுவதாக சமூக நலத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கூறினார்.மாநில மேம்பாட்டில் சமூக நலத் திட்டங்களின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ள மாநில அரசு சமூக நல ஆட்சிக்குழுவின் வாயிலாக இந்த உதவிகளை வழங்கி வருகிறது என்று அவர் சொன்னார்.

இங்குள்ள ஜூப்ளி பேராக் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் சமூக நல மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் கணபதிராவ் மானியங்களை ஒப்படைத்தார்.இந்த நிகழ்வில் புசாட் கெபாஜிக்கான் லெஸ்தாரி திட்டத்தின் கீழ் 17 லட்சம் வெள்ளி தொகையை 51 அமைப்புகள் பெற்றுக் கொண்டன.இது தவிர சினர்ஜி பெரிஹாத்தின் திட்டத்தின் கீழ் 17 அமைப்புகளுக்கு 240,000 வெள்ளியும் சமூக நல தன்னார்வலர் திட்டத்தின் கீழ் 17 அமைப்புகளுக்கு 90,000 வெள்ளியும் வழங்கப்பட்டது.மேலும், இந்நிகழ்வில் 27 சமூக நல இல்லங்களும் 150,000 வெள்ளி மானியத்தைப் பெற்றன.

# தீபாவளி பற்றுச் சீட்டு வழங்கும் திட்டத்திற்கு இவ்வாண்டு
# வெ.23 லட்சம் ஒதுக்கீடு -கணபதிராவ் தகவல்

ஷா ஆலம்:-

இவ்வாண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வசதி குறைந்தவர்களுக்கு ஜோம் ஷோப்பிங் பற்றுச் சீட்டுகளை வழங்குவதற்காக மாநில அரசு சுமார் 23 லட்சம் வெள்ளியைச் செலவிட்டுள்ளது.இத்திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருள்களை வாங்க அவர்களுக்கு 100 வெள்ளிக்கான பற்றுச் சீட்டு வழங்கப்பட்டதாக பரிவுமிக்க அரசுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கூறினார்.தொகுதிகளுக்கு கோட்டா அடிப்படையில் இதுவரை 22 லட்சத்து 95 ஆயிரம் வெள்ளி பகிர்ந்தளிக்க பட்டுள்ளது. சிரமத்தில் உள்ள மற்றும் அதிக பிள்ளைகள் கொண்ட குடும்பங்களை இலக்காக கொண்டு இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டது என்று




அவர் குறிப்பிட்டார்.வசதி குறைந்த மக்களின் சுமையை குறைக்கும் நோக்கில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த பற்றுச்சீட்டைப் பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராங்காடிகளில் அதனைப் பயன்படுத்தி தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ளலாம் என்றார் அவர்.

மக்களின் நலன் மற்றும் சுபிட்சத்தை நீண்ட கால அடிப்படையில் காக்கும் முயற்சியின் அடிப்படையில் இந்த ஷோம் ஷோப்பிங் திட்டத்தை மாநில அரசு அமல்படுத்தியுள்ளது.

பெருநாள் காலத்தில் அந்தந்த இனங்களை சேர்ந்த வசதி குறைந்தவர்களுக்கு தொகுதி சேவை மையத்தின் வாயிலாக இந்த உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மாநில அரசு 80 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது. அதில் 33.4 லட்சம் வெள்ளி கடந்த மே மாதம் கொண்டாடப்பட்ட நோன்புப் பெருநாளின் போது பயன்படுத்தப்பட்டது.

# தோட்டத் தொழிலாளர்கள் நலன் காக்க
# பாரிசான், பெரிக்கத்தான் அரசுகள் தவறிவிட்டன
## -குணராஜ் சாடல்

கிள்ளான்:-

சுமார் அறுபது ஆண்டுகளாக நாட்டை ஆட்சி புரிந்து வந்த பாரிசான் நேஷனல் அரசாங்கம் பெரிக்கத்தான் அரசும் தோட்டத் தொழிலாளர்களின் நலனை காக்கும் பொறுப்பிலிருந்து தவறி விட்டதாக  கெஅடிலான் கட்சியின் தோட்டத் தொழிலாளர் பிரிவுத் தலைவர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார்.

தோட்டப்பள்ளிகளும் மோசமான நிலையில் இருக்கும் காரணத்தால் பாட்டாளிகளின் பிள்ளைகள் சிறந்த கல்வியைப் பெற முடியாது போய்விட்டதாக செந்தோசா சட்டமன்ற உறுப்பினருமான அவர் குற்றஞ்சாட்டினார்.

தோட்டங்களில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் எதிர்நோக்கும் நிலப்பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டது. அரசாங்கத்தின் மெத்தனம் காரணமாக அவர்களின் நலனும் குடியிருப்பு வசதிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன என்று இந்திய சமூகத்திற்கான மந்திரி புசாரின் சிறப்பு



அதிகாரியுமான அவர் குறிப்பிட்டார்.

இந்த அறுபது ஆண்டுகளில் தோட்டத் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு, தமிழ்ப்பள்ளி மற்றும் ஆலயப் பிரச்னைகளுக்கு எந்த தீர்வும் ஏற்படவில்லை என்பதோடு  அவர்களின் எதிர்காலமும் சிறப்பானதாக அமையவில்லை என்று இன்று இங்கு வெளியிட்ட அறிக்கையொன்றில் அவர் சொன்னார்.

கெஅடிலான் மற்றும் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி தோட்டத் தொழிலாளர்கள் உள்பட நாட்டிலுள்ள தொழிலாளர்  வர்க்கத்தின் உரிமைக்காக தொடர்ந்து போராடி வருவதையும் குணராஜ் சுட்டிக்காட்டினார்.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சில பிரச்னைகளுக்கு இன்னும் முழுமையான தீர்வு காணப்படாத போதிலும் பக்கத்தான் தலைவர்கள் கொண்டுள்ள உறுதியான நிலைப்பாடு இப்பிரச்னைகளுக்கு நிச்சயமாக தீர்வினை ஏற்படுத்தித் தரும் என அவர்  உறுதியுடன் கூறினார்.

# வெள்ளத்திற்கு பிந்தைய துப்புரவுப் பணிகளுக்காக
# எம்.பி.எஸ்.ஜே. 556,000 வெள்ளி ஒதுக்கீடு

சுபாங் ஜெயா:-

வெள்ளம் ஏற்படும் பட்சத்தில் அந்த பேரிடருக்குப் பிந்தைய மேலாண்மைப் பணிகளை கவனிக்க 56,000 வெள்ளியை சுபாங் ஜெயா மாநகர் மன்றம் ஒதுக்கியுள்ளது.

புதிய சாதனங்கள் கொள்முதல் செய்வது, குப்பைகளை அகற்ற பெரிய லோரிகள் மற்றும் மண்வாரி இயந்திரங்களை வாடகைக்கு எடுப்பது போன்ற காரணங்களுக்காக இந்த நிதி ஒதுக்கப்படுவதாக சுபாங் ஜெயா டத்தோ பண்டார் டத்தோ ஜோஹாரி அனுவார் கூறினார்.

கடந்தாண்டு வெள்ளம் ஏற்பட்ட போது வெள்ளத்திற்கு பிந்தைய குப்பைகளை அகற்றுவதில் நாம் சிரமத்தை எதிநோக்கினோம். இதன் காரணமாக கடுமையான துர்நாற்றப் பிரச்னை ஏற்பட்டது என்று அவர் சொன்னார்.

இதனால் பல தரப்பினரிடமிருந்து குறைகூறல்களுக்கும் புகார்களுக்கும் ஆளானோம். இம்முறை வெள்ளம் ஏற்படும் பட்சத்தில் அதனை எதிர்கொள்வதற்கு நாம் முழு தயார் நிலையில் உள்ளோம் என்று இன்று இங்கு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

இம்முறை வெள்ளம் ஏற்படும் பட்சத்தில்




அதனை எதிர்கொள்வதற்கு ஏதுவாக 50,000 வெள்ளி நிதி ஒதுக்கீட்டில் பேரிடர் நிதியை தாங்கள் உருவாக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வெள்ளம், நிலச்சரிவு போன்ற பேரிடர்கள் ஏற்படும் போது தொடக்கப் பணிகளை கவனிப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று அவர்  சொன்னார்.



சிலாங்கூர் மாநில நாடாளுமன்ற வேட்பாளர்களுக்கு கட்சியின் அங்கீகார கடிதம் வழங்குதல்
மற்றும் வேட்பாளர்கள் அம்பாங் , கோலசிலாங்கூர், கோம்பாக்,பாங்கி, சுங்கை பெசார்
பக்காத்தான் ஹரராப்பான் ஆதரவாளர்களுடன்















# மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டால் நேர்மையான ஆட்சியை ஹராப்பான் வழங்கும் -அமிருடின்

உலு கிள்ளான்:-

வரும் 15வது பொதுத் தேர்தலில் பக்காத்தான் ஹராப்பான் கூட்டணிக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டால் நேர்மையான ஆட்சியைத் தொடர அது உறுதியாக உள்ளது.

ஷெரட்டன் நகர்வு காரணமாகத் தடைபட்ட சில திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்ள அந்த கூட்டணி விரும்புவதாக சிலாங்கூர் மாநில பக்கத்தான் ஹராப்பான் தலைவர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

எங்கள் அனுபவம் (நாட்டை ஆட்சி செய்து) 22 மாதங்கள் மட்டுமே நீடித்தது. நாங்கள் நிர்வாகத்தை மறுசீரமைக்கும்போது மிகவும் வேதனையான அனுபவமாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

எங்களுக்கு அங்கு வேதனையான அனுபவங்கள் இருந்தாலும், புத்ராஜெயாவை வரும் பொதுத் தேர்தலில் கைப்பற்ற முடியும் என்று நான் நம்புகிறேன். 22 மாத காலத்தில் வைத்ததை மீண்டும் நிலை நிறுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.




கடவுள் அருளால் எங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டால் நாட்டின் பொருளாதாரத்தையும் கண்ணியத்தையும் மீட்டெடுக்க எங்களால் முடிந்ததைச் செய்வோம் என்று அவர் நேற்றிரவு இங்குள்ள ஸ்கேட் பார்க் ஏயு5 இல் நடைபெற்ற இரவு விருந்து மற்றும் கலந்துரையாடல் நிகழ்வில் அவர் கூறினார்.

மலேசியாவின் ஊழல் குறியீட்டு பட்டியல் (சிபிஐ) பக்கத்தான் ஹராப்பான் நிர்வாகத்தின் வெற்றிக்கு தெளிவான சான்றாகும் என்று கோம்பாக் தொகுதிக்கான ஹராப்பான் வேட்பாளருமான அவர் தெரிவித்தார்.

பக்கத்தான் நிர்வாகத்தின் போது சிபிஐ குறியீடு 61 சதவீதத்தில் இருந்து 51 சதவீதமாக வெற்றிகரமாக மேம்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் எங்களிடம் உள்ளன. ஒரு வருடத்திற்குள் இந்தக் குறியீட்டைக் குறைத்தோம் என்றார் அவர்.

ஆனால், பெரிக்காத்தான் நேஷனல் ஆட்சியில் சிபிஐ குறியீடு 58 விழுக்காட்டிற்கு அதிகரித்தது. அதன் பின்னர் வந்த பாரிசான் ஆட்சியில் அந்த குறியீடு 62 விழுக்காடாக உயர்ந்தது என அவர் சொன்னார்.



## ஹராப்பான் ஆட்சியில் மலேசியா எப்படி இருக்கும் என்பதற்கு சிலாங்கூர் சிறந்த முன்னுதாரணம்

ஷா ஆலம்:-

வரும் பதினைந்தாவது பொதுத் தேர்தலில் நாட்டை ஆள்வதற்குரிய வாய்ப்பு பக்கத்தான் ஹராப்பான் கூட்டணிக்கு கிடைத்தால் மலேசியா எப்படி இருக்கும் என்பதற்கு சிலாங்கூர் சிறந்த முன்னுதாரணமாக விளங்குகிறது.அந்த கூட்டணியின் நிர்வாகத் திறமைக்கு சிலாங்கூர் சிறந்த முன்மாதிரியாகவும் வெற்றியின் அடையாளமாகவும் விளங்குகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.நாம் நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு மட்டும் போட்டியிட்டாலும் பாரிசான் நேஷனல் மற்றும் பெரிக்கத்தான் நேஷனலைச் சேர்ந்த நமது எதிராளிகள் மாநில அரசை தொடர்ந்து தாக்கிக் கொண்டிருக்கின்றனர். பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியின் வெற்றியின் அடையாளம் சிலாங்கூர் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளதை இது காட்டுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

முனைப்பு இருந்தால் எதுவும் சாத்தியம் என்பதை நாம் நிரூபித்துள்ளோம். அதனால்தான் சிலாங்கூர் சிறந்த எடுத்துக்காட்டாகவும் மத்திய அரசை ஹராப்பான் கைப்பற்றினால் நாட்டின் நிர்வாகம் எவ்வாறு இருக்கும் என்பதற்கான முன்மாதிரியாகவும் சிலாங்கூர் விளங்குகிறது என அவர் தெரிவித்தார்.

இங்கு நடைபெற்ற பக்கத்தான் ஹராப்பான் சார்பில் சிலாங்கூரில் போட்டியிடும் 22 வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வில் அவர் இதனைக் கூறினார்.

சிலாங்கூரின் வெற்றியை கூட்டரசு நிலையிலும் பிரதிபலிக்கும் விதமாக தகுதியுள்ள மற்றும் அனுபவம் வாய்ந்த வேட்பாளர்களை ஹராப்பான் கூட்டணி நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு நிறுத்தியுள்ளது என அமிருடின் குறிப்பிட்டார். மலேசியாவின் எதிர்காலத்தையும் நாட்டின் இலக்கையும் தீர்மானிக்கும் களமாக வரும் 15வது பொதுத் தேர்தல் அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சிலாங்கூரின் வடக்கில் இழுபறி தெற்கிலும் மத்தியிலும் ஹராப்பானுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசம்

ஷா ஆலம்:-

வரும் பதினைந்தாவது பொதுத் தேர்தலில் சிலாங்கூர் மாநிலத்தின் மத்தியிலும் தெற்கிலும் ஹராப்பான் கூட்டணி வெற்றி எளிதாக பெறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. எனினும் மாநிலத்தின் வட பகுதியில் உள்ள தொகுதிகளை வெல்வதில் கடுமையான பலப்பரீட்சையை அக்கூட்டணி எதிர் நோக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அமானா நெகாரா கட்சியின் தலைவர் முகமது சாபு கூறினார்.



வெற்றியும் வாக்குகளின் எண்ணிக்கையும் சமநிலையில் இருக்காது என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். சில இங்களில் குறிப்பாக சிலாங்கூரின் மத்திய மற்றும் தென் பகுதிகளில் எளிதாக வெல்ல முடியும். அதே சமயம் மாநிலத்தின் வட பகுதியில் நாம் கடுமையான போட்டியை எதிர்நோக்க நேரிடும். ஆகவே, வட பகுதி தொகுதிகளில் வெற்றி பெறுவதற்கு ஏதுவாக நாம் சக்தி, நிதிவளம் மற்றும் அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என அவர் சொன்னார்.கடுமையான போட்டி நிலவக்கூடிய மாநிலத்தின் வட பகுதி நாடாளுமன்றத் தொகுதிகளாக கோல சிலாங்கூர், தஞ்சோங் காராங், சுங்கை பெசார், சபாக் பெர்ணம் ஆகியவை விளங்குகின்றன.

நேற்றிரவு இங்குள்ள ராஜா மூடா மூசா மண்டபத்தில் நடைபெற்ற சிலாங்கூர் ஹராப்பான் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வில் உரையாற்றிய போது முகமது சாபு இவ்வாறு குறிப்பிட்டார்.

ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் வேண்டியவர்களுக்கு சலுகை காட்டுவது போன்ற நடவடிக்கைளிலிருந்து ஒதுங்கியிருக்கும்படி ஹராப்பான் வேட்பாளர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

## புத்ராஜெயாவை ஹராப்பான் கூட்டணி கைப்பற்றினால் மக்கள் சார்பு கொள்கைகள் அமல்படுத்தப்படும்

ஷா ஆலம்:-

வரும் பதினைந்தாவது பொதுத் தேர்தலில் மத்திய அரசாங்கத்தைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றால் சிலாங்கூர் மாநில அரசின் கொள்கைகளை பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி அமல்படுத்தும்.மாநில அரசு அமல்படுத்திய மூத்த குடிமக்கள் பரிவுத் திட்டம், ரூமா இடாமான், ரூமா சிலாங்கூர் கூ வீட்டுமைத் திட்டங்கள், சிலாங்கூர் பொது காப்புறுதித் திட்டம் (இன்சான்) போன்றவை வெற்றிகரமான பலனைத் தந்துள்ளன என்று மாநில ஹராப்பான் தலைவர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.வசதியான வீட்டுடமைத் திட்டம் குறித்து பேசினால், சிலாங்கூரில் நமது கொள்கைகள் வழி நிரூபித்துள்ளோம். புத்ரா ஜெயாவை ஒரு தவணை காலத்திற்கு ஆள்வதற்குரிய வாய்ப்பு கிடைத்தால் இளம் தலைமுறையினருக்கும் ஒட்டு மொத்த மலேசியர்களுக்கான வீட்டுடமைக் கொள்கை மிகவும் சிறப்பானதாக அமையும் என அவர் சொன்னார்.அதே போல், சிலாங்கூர் மாநிலத்தின் அனைத்து மக்களையும் பாதுகாக்கும் பொது காப்புறுதித் திட்டத்தை குறிப்பிடலாம். இத்தகைய திட்டத்தை எந்த பிரதேசமோ அல்லது ஆசியாவிலுள்ள எந்த நாடோ இலவசமாக மேற்கொண்டதாக நான் கருதவில்லை என்று அவர் தெரிவித்தார். தாமதம் ஆனாலும் இறைவன் அருளால் இத்திட்டத்தை நாம் அமல்படுத்தி விட்டோம் என்று சிலாங்கூர் மாநிலத்தில் போட்டியிடும் 22 வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் அவர் குறிப்பிட்டார்.




## சிலாங்கூர் பக்காத்தான் அரசின் முயற்சியில்

# மாநிலத்தில் உருவான 2வது தமிழ்ப்பள்ளி

## கோல்பீல்ஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி

சிலாங்கூர் மாநிலத்தில் இந்தியர்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் மாவட்டங்களில் ஒன்றாக விளங்குவது கோல சிலாங்கூர் ஆகும். கணிசமான எண்ணிக்கையிலான தமிழ்ப்பள்ளிகளைக் கொண்ட மாவட்டமாகவும் இது திகழ்கிறது. அம்மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் ஒன்றான கோல்பீல்ஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளியின் வரலாறு, வளர்ச்சி மற்றும் சாதனைகளை இக்கட்டுரையில் காணவிருக்கிறோம்.

கெப்போங்-கோல சிலாங்கூர் சாலையின் 18வது மைலில் பண்டார் ஸ்ரீ கோல்பீல்ஸ் என்ற புதிய நகரில் அனைத்துலகப் பள்ளிக்குரிய ஏற்றமிகு தோற்றத்துடன் குன்றின் மீது வீற்றிருக்கிறது இப்பள்ளி.

நாற்பது லட்சம் வெள்ளி செலவிலான மூன்று மாடிகள் கொண்ட இப்பள்ளியை நிர்மாணிப்பதற்கு பிள்ளையார் சுழி போட்டது சிலாங்கூர் மாநில அரசுதான் என்கிறார் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெயக்குமார் செல்லையா.

கடந்த 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட வேண்டிய இப்பள்ளியின் கட்டுமானப் பணிகள் தவிர்க்க முடியாத காரணங்களால தாமதமடைந்து 2017 ஆம் ஆண்டில்தான் ஆரம்பமானது. 2019 ஆம் ஆண்டில் பணிகள் முழுமையடைந்து அதே ஆண்டில் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது. இந்த பள்ளியின் நிர்மாணிப்புக்கு சிலாங்கூர் மாநில அரசு 20 லட்சம் வெள்ளியும் மேம்பாட்டு நிறுவனமான கே.எல்.கெப்போங் 20 லட்சம் வெள்ளியும் வழங்கின. இத்தரப்பினரின் உதவியின் வழி பழைய பள்ளி அமைந்திருந்த இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் 3.98 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த புதிய பள்ளி உருவாக்கம் காண்பதற்கு வழி ஏற்பட்டது என்றார் அவர்.

மூன்று மாடிகளுடன் அழகிய வடிவில் காட்சியளிக்கும் இப்பள்ளியில் ஆறு வகுப்பறைகள், நூலகம், தகவல் தொடர்பு மையம், சுகாதார அறை, சிற்றுண்டிச் சாலை போன்ற வசதிகளும் உள்ளன. பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி அம்புஜம் கண்ணன் தலைமையில் இப்பள்ளி சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் சங்கமும், பள்ளி மேலாளர் வாரியமும் இயன்ற உதவிகளை வழங்கி வருகின்றன என்றார் அவர்.

அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பின் காரணமாக இப்பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து உயர்வு கண்டு வருகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டில் 97ஆக இருந்த மாணவர்கள் எண்ணிக்கை 2020இல் 113 ஆகவும் 2021இல் 128 ஆகவும் 2022இல் 157 ஆகவும் உயர்வு



கண்டுள்ளது என அவர் சொன்னார்.

இருபத்தோராம் நூற்றாண்டு வகுப்பைப் பெற்ற கோல சிலாங்கூர் மாவட்டத்தின் முதல் தேசிய வகைப் பள்ளி என்ற பெருமையை கோல்பீல்ஸ் தமிழ்ப்பள்ளி கடந்த 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் தேதி பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தகவல் தொழில்நுட்ப வசதியுடன் சிறப்பான முறையில் கல்வியை கற்பதற்குரிய வாய்ப்பினை வழங்கக்கூடிய இந்த 21ஆம் நூற்றாண்டு வகுப்பினை அப்போதைய துணைக் கல்வியமைச்சர் டத்தோ பி. கமலநாதன் திறந்து வைத்ததாகவும் அவர் சொன்னார்.

### பள்ளியின் வரலாறு

இந்தப் பள்ளி கடந்த 1928 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. தொடக்கத்தில் இப்பள்ளிக்கு சொந்தமாக கட்டிடம் இல்லை. கோல்பீல்ட்ஸ் தோட்ட ஆசரிப்பு கூடாரத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது. அந்த ஆசரிப்பு கூடாரமும் முழுமையான அடிப்படை வசதிகளைக் கொண்டதாக இல்லை.

கடந்த 1967 ஆம் ஆண்டில்தான் இப்பள்ளிக்கு சொந்த கட்டிடம் கிடைக்கப் பெற்றது. இந்த பள்ளி 1928 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட போதிலும் 1945 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்ட நிகழ்வுகளை விவரிக்கக் கூடிய வரலாற்று ஆவணங்கள் எதுவும் இல்லை. தொடக்கத்தில் 21 மாணவர்கள் மற்றும் ஒரு ஆசிரியருடன் இப்பள்ளி செயல்பட்டு வந்ததாக அக்காலக் கட்டத்தில் தோட்டத்தில் வசித்து வந்தவர்கள் கூறுகின்றனர்.

கடந்த 1962ஆம் ஆண்டு வரை இப்பள்ளி கோல்பீல்ட்ஸ் தோட்ட நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வந்தது. அதன் பின்னர் தோட்டத்தின் துணை நிர்வாகியும் பள்ளி வாரியத்தின் தலைவருமான டி.ஜி. ஷ்பெர்ட் மற்றும் பள்ளியின் அப்போதைய தலைமையாசிரியர் கே.பி.சக்திவேல் முயற்சியில் சிலாங்கூர் மாநில கல்வியமைச்சின் 10,000 வெள்ளி மானியத்தில் மூன்று வகுப்பறைகளுடன் கூடிய பள்ளி சுமார் அரை ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டது என ஜெயக்குமார் விவரித்தார்.

### மாணவர்களின் சாதனை

இப்பள்ளி மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி புறப்பாட நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். மாவட்ட நிலையிலான குறுக்கோட்டப் போட்டியில் இப்பள்ளி மாணவர்கள் தவறாது பங்கேற்று வருகின்றனர். தமிழ் மொழி வார நிகழ்வையொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டியில் இப்பள்ளி மாணவர் முதல் பரிசை வென்றார். சிலாங்கூர் மாநில பள்ளிகளுக்கிடையே இணையம் வாயிலாக நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் கோல்பீல்ஸ் பள்ளி மாணவர்கள் ஆறாவது பரிசை வென்றனர் என அவர் ஜெயக்குமார் சொன்னார்.

### மாநில அரசின் மானியம்

இந்த பள்ளிக்கு மாநில அரசின் சார்பில் தொடர்ந்து நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். கடந்த 2019 ஆம் ஆண்டில் 40,000 வெள்ளியும் 2020 ஆம் ஆண்டில் 20,000 வெள்ளியும் 2021 ஆம் ஆண்டில் 20,000 வெள்ளியும் மானியமாக வழங்கப்பட்டது என்றார் அவர்.

இப்பள்ளிக்கு சொந்தமாக திடல் இல்லாதது பெருங் குறையாக உள்ளது. இதனால் மாணவர்களின் புறப்பாட நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு பள்ளிக்கு திடலைப் பெறும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம் என்று அவர் குறிப்பிட்டார். பள்ளிக்கு இரு இணைக்கட்டிடங்களையும் மண்டபத்தையும் நிர்மாணிக்கவும் திட்டமிட்டுள்ளோம். இதுதவிர இப்பள்ளியில் பாலர் பள்ளியை அமைப்பதும் தங்களின் வருங்காலத் திட்டங்களில் ஒன்றாக உள்ளது என்றார்.



# பாரிசான், பெரிக்கத்தான் தோல்வி கண்டவர்கள்! சிறப்பான தேர்தல்

## கொள்கையறிக்கையை தர முடியாது



கிள்ளான்:-

ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட காரணத்தால் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியை விட சிறப்பான தேர்தல் கொள்கையறிக்கையை பாரிசான் மற்றும் பெரிக்கத்தான் நேஷனல் கட்சிகளால் வழங்க முடியாது என்று டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.வீண் விரயம் மற்றும் முறையற்ற நிர்வாகம் காரணமாக முந்தைய தேசிய முன்னணி அரசாங்கம் மக்கள் மனத்தில் குழப்பத்தை விளைவித்ததாக ஹராப்பான் கூட்டணித் தலைவருமான அவர் குறிப்பிட்டார்.அம்னோ மற்றும் தேசிய முன்னணி தலைவர்கள் அதிகளவில் ஊழல் விவகாரங்களில் சம்பந்தப்பட்டுள்ளதால் அவர்களால் உயர்நெறி கோட்பாட்டைத் தற்காக்க முடியும் என தாம் கருதவில்லை என்று அவர் சொன்னார்.

பெரிக்கத்தான் நேஷனல் கட்சி தனது ஆட்சி காலத்தில் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை நீண்ட காலம் அமல்படுத்தியது மற்றும் அதிக மரண எண்ணிக்கை பதிவானது உள்பட கோவிட்-19 பிரச்னைகளைக் களைவதில் தோல்வி கண்டு விட்டது என அவர் குறிப்பட்டார். தடுப்பூசி விவகாரம், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கொள்முதலில் வெளிப்படைத் தன்மை இல்லை என்பதோடு அது குறித்து இன்று வரை நாடாளுமன்றத்தில் பதிலளிக்கவில்லை. மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடிய தேர்வினை வழங்கக்கூடிய ஆற்றலை அவ்விரு கட்சிகளும் கொண்டிருக்கவில்லை என்பதை இது காட்டுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.இங்கு பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியின் தேர்தல் கொள்கையறிக்கையை வெளியிட்ட போது அவர் இவ்வாறு சொன்னார்.

சிறந்த கோட்பாடுகளுக்குட்பட்ட நிர்வாகம் இல்லாதவரை நிறைவேற்ற இயலாத ஒரு ஆவணமாகவே தேர்தல் கொள்கையறிக்கை ஆகிவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.முடிவே இல்லாது நீடித்து வரும் நாட்டின் அரசியல் குழப்பத்திலிருந்து நாட்டைக் காப்பதற்கு வரும் 15வது பொதுத் தேர்தலில் மக்கள் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணிக்கு அமோக ஆதரவை அளித்து வெற்றிப் பெறச் செய்வதுதான் சரியான வழியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மூடா கட்சியின் ஒத்துழைப்பு ஹராப்பானுக்கு வலு சேர்க்கும்

# இளையோரின் ஆதரவைத் திரட்ட உதவும்


ஷா ஆலம்:-

வரும் 15வது பொதுத் தேர்தலில் மலேசிய ஜனநாயக கூட்டணியுடன் (மூடா) கொண்டுள்ள ஒத்துழைப்பு சிலாங்கூரில் பக்கத்தான் ஹராப்பான் நிலையை வலுப்படுத்தும் .

மாநிலத்தில் இளம் தலைமுறையினரின் ஆதரவைத் திரட்டுவதில் உதவக்கூடிய அக்கட்சியுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதை தாங்கள் பெரிதும் வரவேற்பதாக சிலாங்கூர் மாநில ஹராப்பான் தலைவர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சிலாங்கூரில் நம்மை வலுப்படுத்தக் கூடிய மற்றும் மதிப்பைக் கூட்டக் கூடிய ஒரு அங்கமாக மூடா கட்சி விளங்கும். இதன் மூலம் சிலாங்கூர் மாநிலத்திலுள்ள இளையோரின் ஆதரவைப் பெறுவதில் தாக்கத்தை ஏற்படுத்த இயலும் என்று அவர் குறிப்பிட்டார்.






நமது சாதனைகளும் அடைவு நிலையும் தொகுதிகளில் வெற்றி பெறவும் கடந்த பொதுத் தேர்தலில் பாரிசான் நேஷனல் கட்சியிடம் தோற்ற தொகுதிகளை மீண்டும் கைப்பற்றவும் ஹராப்பானுக்கு வாய்ப்பினை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். இங்குள்ள டேவான் ராஜா மூடா மூசாவில் சிலாங்கூர் ஹராப்பான் நாடாளுமன்ற தொகுதிகளுக்கான 22 வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வில் அவர் இவ்வாறு சொன்னார்.

இத்தேர்தலில் மூடா கட்சி சிலாங்கூர், பினாங்கு மற்றும் ஜோகூர் ஆகிய மாநிலங்களில் உள்ள மூன்று தொகுதிகளில் போட்டியிடுகிறது.

# வாருங்கள் கோலசிலாங்கூரை

## பக்காத்தான் ஹராப்பான் கோட்டையாக்குவோம்

கோல சிலாங்கூர்:-

கோல சிலாங்கூரில் லட்சியங்களுடன் பயணம் ஜனநாயகச் செயல் கட்சியின் கோலசிலாங்கூர் தொகுதி தலைவர் உரையாற்றி தொடக்கி வைத்தார்.

நாட்டின் 10 பிரதமராக டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அமர்த்த அனைவரும் திரண்டு வந்து வாக்களித்து வெற்றி பெற வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

அவரை தொடர்ந்து கோல சிலாங்கூர் தொகுதியின் மக்கள் நீதி கட்சியின் தலைவர் தீபன் சுப்ரமணியம் உரையாற்றினார். வரும் பொதுத் தேர்தலில் சிலாங்கூர் மாநிலம் நம்பிக்கை கூட்டணியின் கோட்டையாக மாற்றுவோம். சிலாங்கூரில் உள்ள எல்லா நாடாளுமன்ற தொகுதிகளில் நமது வெற்றியை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.தொடர்ந்து அமானா கட்சியின் கோல சிலாங்கூர் தொகுதி தலைவர் பிரச்சார உரையாற்றினார்.கோல சிலாங்கூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக அமானா கட்சி பிரதிநிதிக்கும்.




# நிக் அஜிஸ் மகன் கெஅடிலான் சார்பில் பேராக்கில் போட்டி

## - அன்வார் தகவல்




பெட்டாலிங் ஜெயா:-

வரும் பதினைந்தாவது பொதுத் தேர்தலில் கெஅடிலான் கட்சி சார்பில் நிக் ஓமார் நிக் அப்துல் அஜிஸ் போட்டியிடுவார் என அக்கட்சி நேற்று அறிவித்தது.

பாஸ் கட்சியின் ஆன்மிகத் தலைவர் டத்தோ நிக் அப்துல் அஜிஸ் நிக் மாட்டின் புதல்வரான நிக் ஓமார் பேராக் மாநிலத்திலுள்ள ஒரு தொகுதியில் போட்டியிடுவார் என கெஅடிலான் கட்சியின் தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

நிக் ஓமார் பேராக்கில் போட்டியிடுவார். அம்மாநிலத்தில் கெஅடிலான் கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின பெயர் பட்டியல் வரும் வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என்று இங்குள்ள கெஅடிலான் கட்சித் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

யாயாசான் டாக்வா இஸ்லாமியா மலேசியா இயக்கத்தின் முன்னாள் தலைவரான நிக் ஓமார், அல்-அஸார் பல்கலைக்கழகத்தில் உசுலடின் ஹடித் துறையிலும் ஜோர்டான் யார்மோக் பல்கலைக்கழகத்தில் ஷரியா துறையிலும் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளார்.

இந்த செய்தியாளர் கூட்டத்தில் கெஅடிலான் கட்சி சார்பில் போட்டியிடவுள்ள அறு வேட்பாளர்களின் பெயர்களையும் அன்வார் அறிவித்தார்.

டத்தோ ஜைனால் அஸ்மான் அபு செமான்- பொதுச் சேவைத் துறையின் முன்னாள் உயர் அதிகாரி

டத்தோ டாக்டர் ஹசான் பாஸ்ரி அவாங் மாட் டஹான்- சுல்தான் ஜைனால் அபிடின் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உதவி வேந்தர்டாக்டர் நோர்ஷியா மைடின் அப்துல் அஜிஸ்- மலாயா பல்கலைக்கழக மருத்துவத் துறையின் முன்னாள் தலைமை விரிவுரையாளர்

சைபுல்யாசான் யூசுப்- சிலாங்கூர் ஸ்க்கத் வாரியத்தின் முன்னாள் தலைமை செயல்முறை அதிகாரி

ஜூபிதிரி ஜோஹா- மலேசிய இளைஞர் மன்றத்தின் முன்னாள் தலைவர் ஃபாத்தின் அமிலினா ஃபாஸ்லி- இளம் மாணவர் வேட்பாளர்



## முதலாவது சிலாங்கூர் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கான வழிமுறை பட்ஜெட்டில் அறிவிக்கப்படும்

சிப்பாங், அக் 30 முதலாவது சிலாங்கூர் திட்டத்தில் இடம் பெற்றுள்ள சில திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான வழி முறை அடுத்த மாத இறுதியில் தாக்கல் செய்யப்படவுள்ள 2023 வரவு செலவுத் திட்டத்தில்

அறிவிக்கப்படும் சபாக் பெர்ணம் வட்டார மேம்பாட்டுத் திட்டம் (சப்டா), தென் சிலாங்கூர் ஒருங்கிணைந்த மேம்பாட்டு பிரதேசம் மற்றும் கெர்பாங் மெரிதிம் சிலாங்கூர் (எஸ்.எம்.ஜி.) எனப்படும் சிலாங்கூர் கடல்சார் நுழைவாயில் திட்டம் ஆகியவை அதில் அடங்கும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த திட்டங்களை விரைவுபடுத் துவதற்காக சிறப்பு செயல்குழு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அது குறித்த தகவல் வரும் பட்ஜெட் தாக்கலின் போது தெரிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த முன்னெடுப்பின் வாயிலாக அனைத்து திட்டங்களையும் விரைவாக அமலாக்க முடியும் என்பதோடு முதலீடு களையும் ஈர்க்க இயலும் என்று அவர் சொன்னார்.

இங்கு ரூமா இடாமான் மெலூர் வீடமைப்புத் திட்டத்தை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.ம்மாதம் 15 ஆம் தேதி சபாக் பெர்ணம் மாவட்டத்தில் நடைபெற்ற ஜொலாஜா சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தின் போது சப்டா திட்டத்தை மந்திரி புசார் தொடக்கி வைத்தார்.

தனியார் துறையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் 190 கோடி வெள்ளி மதிப்பிலான இத்திட்டம் மூலம் ஆண்டுக்கு 24.6 கோடி வெள்ளி வருமானம் ஈட்டவும் 4,000 வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் இயலும்.

## சட்டமன்றக் கூட்டம் நவம்பர் 23இல் நடைபெறும்
# 25ஆம் தேதி படஜெட் தாக்கல்

ஷா ஆலம், அக் 28–

ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்ட சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கூட்டத் தொடர் வரும் நவம்பர் 23ஆம் தேதியன்று தொடங்கும். இக்கூட்டத் தொடரின் இரண்டாம் நாளன்று 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

இந்த கூட்டத் தொடர் நவம்பர் 23 முதல் 24 வரையிலும், நவம்பர் 28 முதல் 30 வரையிலும், டிசம்பர் 5 முதல் 6 வரையிலும் நடைபெறும். நவம்பர் 25ஆம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று சட்டமன்ற அலுவலகம் தெரிவித்தது.

வரவு செலவுத் திட்டத்தை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி மாலை 3.00 மணிக்கு தாக்கல் செய்வார்.

அக்டோபர் 28, அக்டோபர் 31, நவம்பர் 1 முதல் 4 மற்றும் நவம்பர் 7 முதல் 10 வரை நடத்தப்பட வேண்டிய சட்டமன்ற கூட்டத் தொடர் 15 வது பொதுத் தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்படுவதாக சட்டமன்ற அலுவலகம் கடந்த 20ஆம் தேதி அறிவித்தது.



## மாநில பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பைத் தரும் மாவட்டம் சிப்பாங் – மந்திரி புசார் பெருமிதம்




சிப்பாங்:–

சிப்பாங் மாவட்டம் அடைந்து வரும் துரித பொருளாதார வளர்ச்சி மாநிலத்தின் வருமானம் 218 கோடி வெள்ளியாக உயர்வு காண்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.இந்த வியக்கத்தக்க அடைவுநிலை காரணமாக ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர வருமான இலக்கான 205 கோடி வெள்ளியை இரண்டு மாதங்களுக்கு முன்பாவே அடைய முடிந்தது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். எப்போதும் இல்லாத அளவிற்கு கூடுதல் வருமானத்தை மாநிலம் ஈட்டுவதற்கு உதவி புரிந்த அரசு ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாம் 205 கோடி வெள்ளி வருமானத்தை இலக்காக நிர்ணயித்திருந்தோம். எனினும், இப்போதே 2018 கோடி வெள்ளியை எட்டி விட்டோம் என்று அவர் தெரிவித்தார்.சிப்பாங் மாவட்டத்தில் கிடைத்த வருமானம் மிகப்பெரியது. இங்குள்ள சிறந்த அடிப்படை வசதிகள் காரணமாக நிர்ணயிக்கப்பட்டதை விட 800 விழுக்காடு வருமானத்தை பதிவு செய்துள்ளோம் என்றார் அவர்.

இங்கு நடைபெற்ற சிப்பாங் மாவட்ட நிலையிலான ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் நிகழ்வைத் தொடக்கி வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.வெள்ள பேரிடருக்கும், கோவிட்-19 பெருந்தொற்றுக்கும் பிந்தைய பொருளாதார மீட்சி நடவடிக்கைகளும் மாநிலத்தின் வருமானம் அதிகரிப்பதற்கு உதவின என்றும் அவர் சொன்னார்.

அதாவது, மேம்பாட்டாளர்களும் முதலீட்டாளர்களும் மேம்பாட்டு முயற்சிகளுக்கு உதவ முன்வந்தனர். பெருந்தொற்று மற்றும் பேரிடர் சமயத்தில் அவர்கள் செலவுகளை நிறுத்தி வைத்த காரணத்தால் பிரிமியம் மற்றும் நில வரி வசூலிப்பு தடைப்பட்டது என்று அவர் விளக்கினார்.பொருளாதாரம் மீண்டும் திறக்கப்ப ட்ட பின்னர் மேம்பாட்டு நடவடிக்கைகளை நாம் ஊக்குவித்தோம். முதலீட்டு நடவடிக்கைகளும் சீராக நடைபெற்றன. மக்கள் மத்தியில் பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் சுறுசுறுப்படைவதற்கு இது மறைமுகமாக உதவியது என்றார் அவர்.




## பாரிசான் ஆட்சியில் தோன்றிய புத்ரா பெர்டானா
# நிலப்பிரச்னைக்கு பக்கத்தான் அரசு தீர்வு

சிப்பாங்:–

பூச்சோங், புத்ரா பெர்டானா பகுதியைச் சேர்ந்த 9,000 குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கி வந்த நிலப் பிரச்னைக்கு மாநில அரசு தீர்வு கண்டுள்ளது. இக்குடியிருப்பாளர்கள் அனைவரும் அடுத்த மாதம் நில உரிமை மாற்று அங்கீகாரக் கடிதத்தைப் பெறவுள்ளனர்.இந்த அங்கீகாரம் தொடர்பில் நில அலுவலகத்தின் செயலறிக்கைக்காக தாங்கள் காத்திருப்பதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.சுமார் 9,000 குடியிருப்பாளர்களை உட்படுத்திய புத்ரா பெர்டானா நிலப் பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை இந்த நிகழ்வில் அறிவிக்கிறேன் என்று அவர் தெரிவித்தார். இவ்விவகாரத்திற்கு தீர்வு காண முடியும் என நம்புகிறேன். சம்பந்தப்பட்ட மேம்பாட்டாளருடன் கடந்த மூன்று ஆண்டுகளாக பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்த பிரச்னை தோன்றியது. அதற்கு தீர்வு காணும் வழிவகைகளை நாம் ஆராய்ந்து வருகிறோம் என அவர் குறிப்பிட்டார்.

# மக்கள் ஆதரவின் எதிரொலி - கோம்பாக்கில்
## மாநில அரசின் மலிவு விற்பனை நவ.17 வரை நடைபெறும்

கோம்பாக், நவ 2-

சிலாங்கூர் மாநில அரசின் ஏற்பாட்டிலான அத்தியவசியப் பொருள் மலிவு விற்பனை இன்று தொடங்கி வரும் நவம்பர் 17ஆம் தேதி வரை கோம்பாக்கில் நடைபெறும்.

வட்டார மக்களிடமிருந்து கிடைத்து வரும் அமோக ஆதரவு காரணமாக இந்த மலிவு விற்பனை வெள்ளிக்கிழமை தவிர்த்து இதர நாட்களில் தொடர்ச்சியாக நடைபெறும் என்று சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகத்தின் (பி.கே.பி.எஸ்.) உதவி நிர்வாக முகமது ஹஸ்ரி அபு ஹசான் கூறினார்.

கோம்பாக் வட்டார மக்களின் அத்தியாவசியப் பொருள் தேவையை நிறைவு செய்வதற்காக இப்பகுதியில் 15 நாட்களுக்கு தொடர்ச்சியாக மலிவு விற்பனையை பி.கே.பி.எஸ். நடத்தும் என அவர் குறிப்பிட்டார்.

ஆகவே. வட்டார மக்கள் குறிப்பாக கோழி மற்றும் முட்டையை வாங்க விரும்புவோர் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி விரைந்து வந்து அவற்றை வாங்கிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.



காரணம், இந்த விற்பனையில் விரைவாக விற்றுத் தீர்க்கும் உணவு பொருள்களாக கோழியும் முட்டையும் விளங்குகின்றன என்றார் அவர்.

முன்பு இந்த விற்பனை நிகழ்வு மாநிலத்திலுள்ள அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும் நடைபெற்று வந்தது.

இந்த விற்பனைத் திட்டத்தில் கோழி 10.00 வெள்ளி விலையிலும் பி கிரேடு முட்டை ஒரு தட்டு 10.00 வெள்ளி விலையிலும் இறைச்சி ஒரு பாக்கெட் 10.00 வெள்ளி விலையிலும் மீன் ஒரு பாக்கெட் 6.00 வெள்ளி விலையிலும் விற்கப்படுகிறது.இவை தவிர 5 கிலோ சமையல் எண்ணெய் 25.00க்கும் அரிசின் 5 கிலோ 10.00 வெள்ளிக்கும் கிடைக்கும். சிலாங்கூர் மாநில அரசு கடந்த நவம்பர் 6 ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 6 ஆம் தேதி வரை 56 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 160 இடங்களில் இந்த மலிவு விற்பனையை நடத்தி வருகிறது.

# மலிவான விலையில் தரமான பொருள்களை வழங்கும்
## ஏசான் ராக்யாட் திட்டம்
## பொதுமக்கள் புகழாரம்



உலு கிளாங்:-

ஜெலாஜா ஏசான் ராக்யாட் திட்டத்தின் கீழ் மலிவான விலையில் தரமான பொருள்கள் வழங்கப்படுவது குறித்து பொது மக்கள் திருப்தி அடைந்துள்ளனர்.இந்த விற்பனையில் பயனீட்டாளர்களின் தேவைகேற்ப பெரிய கோழிகள் குறைந்த விலையில் கிடைப்பதாக தனியார் துறை பணியாளரான முகமது ஹபிசுடின் ரஸியான் (வயது 31) கூறினார்.

இந்த விற்பனைத் திட்டத்தில் விற்கப்படும் கோழி, இறைச்சி, சமையல் எண்ணெய் போன்ற பொருள்கள் தரமானவையாக உள்ளதை காண முடிகிறது. சுமார் 2 கிலோ எடை கொண்ட கோழி வெறும் 10.00 வெள்ளிக்கே விற்கப்படுகிறது என்று அவர் சொன்னார்.

மிகவும் பயன்மிக்க இத்திட்டம் அவ்வப்போது அல்லாமல் தினசரி நடத்தப்பட வேண்டும் என்று நேற்று இங்கு நடைபெற்ற மலிவு விற்பனையின் போது அவர் குறிப்பிட்டார்.

இந்த விற்பனைத் திட்டத்தின் மூலம் சமையல் பொருள்களை வாங்குவதற்கு உண்டாகும் செலவை பெருமளவில் குறைக்க முடிந்துள்ளதாக தாமான் கிராமாட்டைச் சேர்ந்த கு சனிஷா கு சஹறாட் (வயது 52) தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் மூலம் பணத்தை மிச்சப்படுத்த முடிகிறது. சந்தை அல்லது மளிகைக் கடைகளில் வாங்குவதைக் காட்டிலும் இங்கு விலை மிக குறைவாக உள்ளது. மக்கள் வாழ்க்கைச் செலவினத்தைக் குறைப்பதற்கு ஏதுவாக இந்த திட்டம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும் என்றார் அவர்.

இதனிடையே, இத்திட்டம் குறித்து கருத்துரைத்த பொறியாளரான முகமது அமார் அபிப் ஜைனால் (வயது 32) குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் இத்திட்டத்தின் மூலம் மிகுந்த பயனைப் பெற இயலும் என்று சொன்னார்.

இன்றைய நிலையில் வாழ்க்கைச் செலவினம் மிகவும் அதிகரித்து விட்டது. குறைந்த விலையில் பொருள்களை வாங்குவதற்குரிய மாற்றுத் திட்டமாக இது விளங்குகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.



### கோல லங்காட் உயர் தொழில்நுட்ப காகித தொழிற்சாலையில்
# 200 பேருக்கு வேலை வாய்ப்பு

கோல லங்காட்:-

ஓ.ஜி. ஹோல்டிங்ஸ் கார்ப்ரேஷன் நிறுவனத்திற்கு சொந்தமான ஜி.எஸ். பேப்பர்போர்ட் அண்ட் பேக்கஜிங் காகித தொழிற்சாலை கோல லங்காட்டில் திறக்கப்பட்டதன் மூலம் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் செயல்படத் தொடங்கிய 120 கோடி வெள்ளி முதலீட்டிலான இத்தொழிற்சாலை வட்டார மக்கள் மத்தியில் பொருளாதார ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அந்நிறுவனத்தின் தலைவரும் தலைமை செயல் முறை அதிகாரியுமான ஹிரியோக்கி இசோனோ கூறினார். இந்நிறுவனத்தை கடந்த 2010 ஆண்டில் கொள்முதல் செய்தது முதல் மலேசியாவில் தங்களின் முதலீட்டை வலுப்படுத்தியதோடு நாட்டின் மிகப்பெரிய காகித உற்பத்தியாளர் என்ற நிலையை வலுப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது வரை மலேசிய பொருளாதாரத்திற்கேற்ப 18 இடங்களில் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்துள்ளோம். காகித தயாரிப்பில் பிஎம்3 தொழில்நுட்பத்தை நாங்கள் பயன்படுத்துகிறோம் என்று அவர் குறிப்பிட்டார்.சுற்றுவட்டார மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி அதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதே தங்களின் தலையாய நோக்கம் என்றும் அவர் சொன்னார்.

இந்த தொழிற்சாலையை மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா நேற்று அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தார்.

# அனைவருக்கும் பலன் தரும் திட்டங்கள்

மலேசியாவின் உள்நாட்டு உற்பத்திக்கு தொடர்ந்து அதிக பங்களிப்பை வழங்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு சிலாங்கூர் தொடர்ந்து பங்காற்றி வருகிறது என்பது நிரூபணமாகியுள்ளது. கடந்த 2021 ஆம் ஆண்டில் சிலாங்கூர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 24.8 விழுக்காட்டு பங்களிப்பை வழங்கியது.இந்த வளங்களின் வாயிலாக கடந்த 2008 முதல் மாநில மக்களின் சுபிட்சமான வாழ்வுக்கு மாநில அரசு பல்வேறு புதிய திட்டங்களையும் அமல்படுத்தியும் நடப்பிலுள்ள திட்டங்களை மேம்படுத்தியும் வருகிறது. இக்காலக்கட்டத்தில் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் மூலம் 2022 ஆம் ஆண்டில் இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் (ஐ.எஸ்.பி.) மூலம் 44 திட்டங்களை மாநில அரசு அமல்படுத்தியுள்ளது. ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ள அந்த 44 ஐ.எஸ்.பி. திட்டங்கள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன.

### இல்திஸாம் சிலாங்கூர் மக்கள் ஆக்கத்திறனளிப்பு (10 திட்டங்கள்)

* சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டம் (பிங்காஸ்) அத்தியாவசியப் பொருள்கள், பள்ளி உபகரணங்களை வாங்கவும் பாலர் பள்ளி கட்டணம் செலுத்தவும்

* மாதம் 300 வெள்ளி உதவித் தொகை (ஆண்டுக்கு வெ.3,600) இலவச குழநீர் திட்டம் மாதம் 5,000 வெள்ளிக்கும் குறைவாக வருமானம் பெறும் தகுதியுள்ள குடும்பங்களுக்கு 20 கனமீட்டர் இலவச நீர் விநியோகம்

* பெருநாள் கால ஷோம் ஷோப்பிங் திட்டம் நோன்புப் பெருநாள், சீனப்புத்தாண்டு மற்றும் தீபாவளியின் போது பி40 தரப்பினருக்கு 100 வெள்ளிக்கான பற்றுச்சீட்டு

* ரோடா டாருள் ஏசான் (ரைட்) உணவு மற்றும் பொருள் விநியோகப் பணியில் ஈடுபட்டுள்ள இளையோருக்கு மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் மற்றும் சொக்சோ திட்டத்தில் பங்கேற்க உதவித் தொகை

* சிலாங்கூர் சட்ட உதவி நிதி குடும்ப மற்றும் வேலை தொடர்பான வழக்குகளுக்கு இலவச சட்ட உதவி

* மூத்த குடிமக்கள் பரிவுத் திட்டம் மூத்த குடிமக்களுக்கு அவர்கள் பிறந்த மாதத்தில் பொருள்கள் வாங்குவதற்காக 100 வெள்ளிக்கான பற்றுச் சீட்டு மற்றும் மரண சகாய நிதியாக வெ.500 வழங்கப்படும்

* சுய வாழ்வு திட்ட மையம்மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் மற்றும் ஆக்கத்திறனளிப்பு பயிற்சி மையம்

* கிராம மற்றும் மலிவு விலை வீடுகளுக்கு வீட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு

* ஊராட்சி மன்ற பகுதிகளில உள்ள அங்காடி மற்றும் சிறு வியாபாரிகளுக்கு லைசென்ஸ் கட்டண விலக்களிப்பு

* ஸ்மார்ட் சிலாங்கூர் பஸ் சேவை சிலாங்கூர் முழுமைக்கும் இலவச பஸ் சேவை இல்திஸாம்

### சிலாங்கூர் சுகாதார சேவை (11 திட்டங்கள்)

*இல்திஸாம் சிலாங்கூர் சேஹாட் அடிப்படை மருத்துவ சேவை மற்றும் காப்புறுதி பாதுகாப்பு

*இருதய சிகிச்சைத் திட்டம்இருதய சிகிச்சைக்கு 50,000 வெள்ளி வரை உதவித் தொகை

* பந்துவான் சேஹாட் சிலாங்கூர் டயாலிசிஸ், விழிப்படல சிகிச்சை,செயற்கை கால், சிறு அறுவை சிகிச்சைகள், மருத்துவ கருவிகள் வாங்க நிதியுதவி

* சிலாங்கூர் சாரிங்56 சட்டமன்றத் தொகுதிகளில் இலவச மருத்துவப் பரிசோதனை

* சிலாங்கூர் புற்றுநோய் பரிசோதனைத் திட்டம் அனைத்து 56 சட்டமன்றத் தொகுதிகளிலும் மேமோகிராம், புரோஸ்டெட், கொலோரெக்டட், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் சோதனை

*சிறார் சத்துணவுத் திட்டம் சிறார்களுக்கு ஊட்டச் சத்துணவு விநியோகம்

* மனநல ஆரோக்கியம் மனநல பாதுகாப்பு மீதான விழிப்புண ர்வை அதிகரிக்கும் திட்டம், மனநல சிகிச்சைக்கு உதவித் நிதி

* காச நோய் சிகிச்சை (டிபி) வறட்டு இருமல் சிகிச்சைக்கு நிதியுதவி'

* மகளிர் சுகாதாரத் திட்டம் 50 வயதுக்கும் மேற்பட்ட மகளிருக்கு இலவச மேமோகிராம், பயோப்ஸி, அல்ட்ராசவுண்ட் சோதனை

* சிலாங்கூர் ஆயுள் காப்புறுதி திட்டம் (இன்சான்) பிறந்து 30 நாள் ஆன குழந்தை முதல் 80 வயது வரையிலானவர்களுக்கு ஓராண்டிற்கு இலவச காப்புறுதி

### இல்திஸாம் சிலாங்கூர் கல்வித் திட்டம் (7 திட்டங்கள்)

* டியூஷன் ராக்யாட் மையங்கள் எஸ்.பி.எம். மாணவர்களுக்கு மதிய உணவுடன் கூடிய இலவச டியூஷன் வகுப்புகள்

* இல்திஸாம் மஹாசிஸ்வா சிலாங்கூர் டிப்ளோமா/ பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 1,000 வெள்ளி உதவி நிதி

*பெடுலி சிஸ்வாஉள்நாட்டு உயர்கல்விக் கூடங்களில் சான்றிதழ் முதல் பட்டப்படிப்பு வரை மேற்கொள்ளும் சிலாங்கூர் மாணவர்களுக்கு கல்வி கட்டண உதவி

* சிலாங்கூர் மாநில பள்ளிகளுக்கான உதவித் திட்டம் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதியுதவித் திட்டம்

* இல்திஸாம் ஃபார்டு அய்ன் திட்டம் 296 கல்விக் கூடங்களில் பயிலும் 14,000 குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பை சேர்ந்த மாணவர்களுக்கு வெ.30 கல்விக் கட்டண உதவித் தொகை

* சிலாங்கூர் தொழில்நுட்ப கடனுதவித் திட்டம் வசதி குறைந்த மாணவர்களுக்கு கணிணி வாங்குவதற்கான கடனுதவி

* தொழில் திறன் திட்டம் ஸ்மார்ட் சிலாங்கூர் தொழில்துறையின் தேவைக்கேற்ப தொழில்திறன் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி

### இல்திஸாம் சிலாங்கூர் வீட்டுடமை (7 திட்டங்கள்)

* இல்திஸாம் பெனோரக்கா பண்டார் குடிசைவாசிகள் பிரச்னைக்கு தீர்வு காண சிலாங்கூர் கூ வீட்டுடமைத் திட்டம் உருவாக்கம்

* ரூமா சிலாங்கூர்கூ திட்டம் சொந்த வீடு இல்லாதவர்கள் முதல் வீட்டைப் பெறுவதற்கு உதவும் கட்டுப்படி விலையிலான வீட்டுடமைத் திட்டம்

* விவேக வாடகைத் திட்டம் நியாயமான விலையில் வீடுகள் வாடகைக்கு விடப்படும். செலுத்தப்பட்ட வாடகையில் 30 விழுக்காடு சிலாங்கூர் கூ வீடுகளை வாங்குவதற்கு திருப்பித் தரப்படும்

* செரியா திட்டம் மலிவு விலை மற்றும் நடுத்தர மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்புகளை புனரமைப்பு செய்வதற்கு உதவி

* 2ஸ்தேய் திட்டம் (வாடகை மூலம் கொள்முதல் திட்டம்) கடன் பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்ற, வீடு வாங்க இயலாத மற்றும் வீடு இல்லாத பி40 தரப்பினர் வீட்டில் வாடகைக்கு இருப்பதன் மூலம் அதனை கொள்முதல் செய்யும் திட்டம்

* மலிவு விலை வீடுகளுக்கான காப்புறுதித் திட்டம் பேரிடர் மற்றும் பழுதுகளிலிருந்து பாதுகாக்கும் திட்டம்

* பரிவுமிக்க அரசின் புதிய வீடு நிர்மாணிப்பு வீடு பழுதுபார்ப்பு திட்டம் பழுதடைந்த வீடுகள் சீரமைத்து தரப்படும்.

### இல்திஸாம் தொழில்முனைவோர் (5 திட்டங்கள்)

* ஹிஜ்ரா சிறுதொழில் கடனுதவித் திட்டம் தொழில் முனைவோர் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட விரும்புவோருக்கு வெ.5,000 முதல் வெ.100,000 வரை கடனுதவி

*சிலாங்கூர் குறு தொழில்முனைவோ நிதி வெ.30,000 வரையிலான வர்த்தக உபகரணங்களை வாங்குவதற்கு உதவும் திட்டம்

* இந்திய சமூக மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு இலாகா (ஐ-சீட்) வர்த்தக உபகரணங்கள் வாங்க 10,000 வெள்ளி வரை நிதியுதவி

*சிடேக் டிஜிட்டல் இணையான கடனுதவித் திட்டம் வர்த்தகத்தை இலக்கவியல்மயமாக்க விரும்புவோருக்கு மொத்த செலவினத்தில் 50 விழுக்காடு அல்லது 5,000 வெள்ளி வரை நிதியுதவி

* மாநில வறுமை ஒழிப்பு பெருந்திட்டம் (ப்ளுப்ரிண்ட்) சிறு தொழில்முனைவோர் வர்த்தக உபகரணங்களை வாங்குவதற்கு 10,000 வெள்ளி வரையிலான நிதியுதவி

### இல்திஸாம் மெஸ்ரா அனாக் சிலாங்கூர் (4 திட்டங்கள்)

* இல்திஸாம் அனாக் இஸ்திமேவா சிலாங்கூர் (அனிஸ்) சிறப்பு தேவைகள் கொண்ட பிரத்தியேக குழந்தைகளுக்கு விஷேச உதவி

* இல்திஸாம் அனாக் சிலாங்கூர் கடந்த 2019 முதல் மாநிலத்தில் பிறந்த குழந்தைகளுக்கு 500 வெள்ளியை தேசிய கல்வி சேமிப்புத் திட்டத்தில் சேர்க்கும் திட்டம்

* இல்திஸாம் பந்துவான் அசோஹான் அனாக்கூ பிந்தார் (ஆஸோ பிந்தார்) நான்கு வயதுக்கும் குறைவான பிள்ளைகளுக்கு மாதம் 100 வெள்ளி பாலர் பள்ளி கல்விக் கட்டணம்

* சிலாங்கூர் பாலர் பள்ளி உதவித் திட்டம் (துனாஸ்) ஐந்து மற்றும் ஆறு வயதுடைய பிள்ளைகளுக்கு மாதம் 50 வெள்ளி பாலர் பள்ளிக் கட்டணம்

### இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் 2022- 44 திட்டங்கள்

இல்திஸாம் சிலாங்கூர் மக்கள்
ஆக்கத் திறனளிப்பு திட்டங்கள் -10
இல்திஸாம் சிலாங்கூர் சுகாதாரத் திட்டம்- 11
இல்திஸாம் சிலாங்கூர் கல்வித் திட்டம்- 07
இல்திஸாம் சிலாங்கூர் வீட்டுடமைத் திட்டம்- 07
இல்திஸாம் சிலாங்கூர்
தொழில்முனைவோர் திட்டம்- 05
இல்திஸாம் சிலாங்கூர் சிறார் பரிவுத் திட்டம்- 04
இல்திஸாம் சிலாங்கூர்
சிலாங்கூர் முக்கிய தரவுகள்
65.2 லட்சம் மக்கள் தொகை-
மலேசியாவின் மக்க தொகையில்
24.8%-மலேசியாவின் மொத்த உள்நாட்டு
உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு பங்களிப்பு
32%-மலேசியாவில் தேசிய உற்பத்தி
துறையில் அதிக பங்களிப்பு
26%-மலேசியாவில் தேசிய சேவைத்
துறையில் அதிக பங்களிப்பு
2017 முதல் 2021 வரை மலேசிய உள்நாட்டு
உற்பத்தியில் சிலாங்கூர் மாநிலத்தின் பங்களிப்பு

# வர்த்தகத்தை விரிவாக்கம் செய்ய ஐ-சீட், சித்தம் திட்டங்கள் பேருதவி

## இந்திய வணிகர்கள் புகழாரம்




ஷா ஆலம்:-
சிலாங்கூர் அரசின் இந்திய சமூக மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு இலாகா (ஐ-சீட்) மற்றும் இந்திய தொழில் ஆர்வலர் மையம் (சித்தம்) மூலம் தங்கள் வர்த்தகத்தை விரிவுபடுத்திக் கொள்வதற்குரிய வாய்ப்பினை இந்திய வணிகர்கள் பெற்றுள்ளனர். வர்த்தக உபகரணங்களை இலவசமாக வழங்கும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றவர்களில் ஒருவராகத் திகழ்கிறார் கோல லங்காட், ஜென்ஜாரோம் பகுதியில் சிகையலங்காரிப்பு நிலையத்தை நடத்தி வரும் ஜி.ராஜீவ்.

ஐ-சீட் திட்டத்தின் மூலம் சுமார் 4,000 வெள்ளி மதிப்பிலான சுழலும் முடிதிருத்தும் நாற்காலிகள், கண்ணாடிகள், முடி வெட்டும் கருவிகள் மற்றும் கிளிப்பர்கள் உள்ளிட்ட பொருள்களைத் தாம் பெற்றதாக அவர் சொன்னார்.

கடந்த 2019 ஆம் ஆண்டில் ஒரு நிலையத்துடன் தொடங்கிய தனது வர்த்தகம் தற்போது ஜென்ஜாரோம் மற்றும் பந்திங்கில் மேலும் இரு கிளைகளைத் திறக்கும் அளவிற்கு விரிவாக்கம் கண்டுள்ளதாக 31 வயதான ராஜீவ் கூறினார்.

மாநில அரசின் இந்த உதவியின் மூலம் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு சேவையை வழங்க முடிந்ததோடு கூடுதல் வருமானத்தையும் பெற முடிந்தது. இதில் கிடைத்த லாபத்தைக் கொண்டு மேலும் இரு கிளைகளைத் திறந்துள்ளேன் என்றார் அவர்.

இளைஞர்களையும் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினரையும் வணிகத்தில் ஈடுபட ஊக்குவிப்பு வழங்கி வரும் மாநில அரசு மற்றும் ஐ-சீட் நிர்வாகத்திற்கு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன் என்று சிலாங்கூர்கினியிடம் அவர் தெரிவித்தார்.

ஐ-சீட் மற்றும் சித்தம் திட்டங்களால் பயனடைந்த சுமார் 3,000 சிறு வணிகர்களில் ராஜீவும் ஒருவராவார்.

நவம்பர் 2021 முதல் பிப்ரவரி 2022 வரையிலான காலக் கட்டத்தில் இத்திட்டங்களின் வாயிலாக பயன் பெற்றவர்களின் கருத்துகள் பின்வருமாறு:

* நான் முதன்முதலில் சித்தம் கருவிகள் மானியத்திற்கு அணுகிய போது உணவு டிரக்கிற்கான கடனுக்கும் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டேன். ஆச்சரியம் என்னவென்றால் இரண்டு திட்டங்களுக்கும் என்னால் உதவி பெற முடிந்தது. - பிரியாணி விற்பனையாளர் எஸ்.ரமேஷ்

* மாநில அரசின் உதவி எனக்கு நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் நான் எனது சொந்த நிதியைப் பயன்படுத்தியிருந்தால் அதன் மதிப்பு 3,800 வெள்ளியாக இருந்திருக்கும். அந்தத் தொகையைச் சேமிக்க அதிக எனக்கு அதிக காலம் பிடிக்கும் கார் கழுவும் மைய நடத்துநர் ஆர் ராஷ்வின்

* எனது வாடிக்கையாளர்களிடமிருந்து நான் பெற்ற ஆர்டர்களை முடிக்க அதிக நேரம் எடுத்துக் கொண்டேன். ஆனால் சித்தம் நிறுவனத்திடம் இருந்து பெற்ற தையல் இயந்திரம் மூலம் காத்திருப்பு காலம் குறைக்கப்பட்டதால் எனது வாடிக்கையாளர்கள் அதிக திருப்தி அடைந்துள்ளனர். - பாரம்பரிய ஆடை தையல் கலைஞர் எம் ராஜேஸ்வரி

# வர்த்தக விரிவாக்கத்திற்காக 6,000 வணிகர்களுக்கு 9.23 கோடி வெள்ளி கடனுதவி- ஹிஜ்ரா வழங்கியது

ஷா ஆலம்:-
இவ்வாண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை 5,795 தொழில் முனைவோர் 9 கோடியே 23 லட்சத்து 70 ஆயிரம் வெள்ளி கடனுதவியை யாயாசான் ஹிஜ்ரா அறவாரியத்திடமிருந்து பெற்றுள்ளனர்.ஹிஜ்ரா அறவாரியத்தினால் வழங்கப்படும் ஐ-பிஸ்னஸ், ஜீரோ டு ஹீரோ, நியாகா டாருள் ஏசான் (நாடி), கோ டிஜிட்டல், ஐ-லெஸ்தாரி, ஐ-பெர்மூசிம் ஆகிய ஆறு திட்டங்கள் வாயிலாக இந்த கடனுதவி வழங்கப்பட்டதாக அதன் சந்தைப் பிரிவுத் நிர்வாகி முகமது ஏசான் முகமது ரோஸ்டி கூறினார்.வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதில் சிரமத்தை எதிர்நோக்கியிருந்த புதியவர்கள் மற்றும் வர்த்தகத்தில் ஏற்கவே ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த திட்டம் பெரும் நன்மையைத் தந்துள்ளது என்று அவர் சொன்னார்.

மற்ற வணிகர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவதற்கு ஏதுவாக பெற்ற கடனை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் திருப்பித் தரும்படி இத்திட்ட பங்கேற்பாளர்களை அவர் கேட்டுக் கொண்டார்.நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள்




கடனைத் திரும்பச் செலுத்துவதில் இத்திட்ட பயனாளிகளின் ஒத்துழைப்பை பெரிதும் எதிர்பார்க்கிறோம். அவர்கள் திரும்பச் செலுத்தும் பணத்தைக் கொண்டு புதிதாக விண்ணப்பம் செய்வோருக்கு கடனுதவி வழங்க முடியும் என்றார் அவர். கடனை முறையாக செலுத்தாதவர்களை கிளை அதிகாரி தொடர்பு கொண்டு நினைவூட்டுவார். சம்பந்தப்பட்டவர்கள் தொடர்ந்து பணத்தை செலுத்தாதிருந்தால் கடனைத் திரும்ப பெறுவதற்கு கடன் வசூல் ஏஜெண்டின் உதவியை கடன் கட்டுப்பாட்டு பிரிவு நாடும் என அவர் விளக்கினார்.

# சிலாங்கூர் மக்கள் சொந்த வீட்டைக் கொண்டிருப்பதை உறுதி செய்ய மற்றொரு ரூமா இடமான் திட்டம் தொடங்கப்பட்டது

சிப்பாங்:-
டத்தோ மந்திரி புசார் மற்றொரு ரூமா சிலாங்கூர் கூ இடமான் திட்டத்தை சைபர்ஜெயா, டிங்கிலில் தொடங்கினார். இது மக்கள் சொந்த சொகுசான வீடுகளில் வாழ உத்தரவாதம் அளிக்கிறது.ரூமா இடமான் மெலூர் திட்டம் 1,000 சதுர அடி பரப்பளவில் மூன்று படுக்கையறைகளுடன் கூடிய 1,448 யூனிட் வீடுகளை ரிம250,000 விலையில் விற்பனை செய்வதை நோக்கமாக கொண்டது என டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

டெவலப்பர் எல்பிஎஸ் பினா குரூப் பெர்ஹாடுடன் பெர்மோடாலன் நெகிரி சிலாங்கூர் பெர்ஹாட் செயல்படுத்திய திட்டமும் ஓரளவுக்கு பொருத்தப்பட்டுள்ளது மற்றும் இரண்டு பார்க்கிங் இடங்கள் 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"இந்த திட்டத்தில் பி40 மற்றும் எம்40 குடியிருப்பாளர்களிடையே நிலவும் வீடு தேவைகளை நிவர்த்தி செய்வதில் சிலாங்கூர் அரசாங்கத்தின் இலக்கின் மற்றொரு வெற்றியாகும்." போதுமான, தரமான மற்றும் வசதியான வீட்டுகளை வழங்குவதில் நிர்வாகம் எப்போதும் மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ளது," என்று அவர் தனது உரையின் போது கூறினார்.

ரூமா சிலாங்கூர் அபாடி, காஜாங் மற்றும் புக்கிட் ஜெலுத்தோங் ரூமா இடமான், ஷா ஆலம் உள்ளிட்ட மூன்று திட்டங்களை உள்ளடக்கிய மொத்தம் 4,631 ரூமா இடமான்கள் இதுவரை கட்டப்பட்டுள்ளன என்று அமிருடின் கூறினார்.

முன்னதாக, சிலாங்கூரில் பணிபுரியும் மற்றும் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தங்களின் முதல் வீட்டை பெறுவதை ஆறு ரூமா இடமான் திட்டங்களைக் கட்டுவதற்கான மாநில அரசின் திட்டங்களை அமிருடின் அறிவித்தார்.

சம்பந்தப்பட்ட பல இடங்களில் பண்டார் சௌஜானா புத்ரா, பூச்சோங் மற்றும் புன்சாக் ஆலம் ஆகியவை அடங்கும்.

# மாநில அரசின் உபகரண உதவி மாட்டுப் பண்ணை உரிமையாளர் ராஜலிங்கம் மகிழ்ச்சி

சிப்பாங்:-
ஆறு மாதங்களுக்கும் மேலாக வருமானம் இன்றிஅவதியுற்று வந்த கறவை மாட்டு பண்ணை உரிமையாளரான ஆர். ராஜலிங்கம் (வயது 63) மாநில அரசின் உபகரண உதவியால் தனதுபண்ணைத் தொழிலை மீண்டும் நடத்த தொடங்கியுள்ளார். கடந்தாண்டு இறுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் அரைவை இயந்திரம், பால் கறக்கும் இயந்திரம் நீர் இறைக்கும் பம்ப் இயந்திரம் போன்றவைமோசமாக சேதமுற்றதாக டிங்கில், கம்போங் ஸ்ரீ தஞ்சோங்கை சேர்ந்தவரான ராஜலிங்கம் கூறினார்.

இந்த உபகரணங்களை பெறுவதற்கு தாம் செய்த விண்ணப்பத்தை மாநில அரசு ஏற்றுக் கொண்டது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது என்று பெருமிதம் பொங்க அவர் தெரிவித்தார். நான் பல ஆண்டுகளாக கறவை மாடுகளை வளர்க்கும் தொழிலில்




ஈடுபட்டு வருகிறேன.

வெள்ளத்தில் எனது உபகரணங்கள சேதமடைந்து விட்டதால் தொழிலை நடத்துவது மிகவும் சிரமமானதாக ஆனது. இதன் காரணமாக பண்ணைத் தொழிலை சிறிது காலத்திற்கு நிறுத்தி வைத்திருந்தேன. அந்த உபகரணங்களை வாங்குவதற்கு தேவைப்படும் ஆயிரணக்கானக்கான வெள்ளி என்னிடம் இல்லை. இந்த சமயத்தில்தான் கிராமத் தலைவரும் பெங்குளுவும் எனது பண்ணைக்கு வந்து நிலைமையை நேரில் கண்டனர். அதன் பின்னர் உபகரண உதவிக்கு விண்ணப்பம் செய்யும்படி அவர்கள் எனக்கு ஆலோசனை கூறினர். எனது விண்ணப்பம் அவ்வளவு சீக்கிரத்தில் அங்கீகரிக்கப்படும் என நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இந்த உதவியை வழங்கிய மாநில அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் சொன்னார். மூன்று பிள்ளைகளுக்கு தந்தையான ராஜலிங்கம் 28 கறவை மாடுகளை வளர்த்து வருகிறார். சிலாங்கூர் சிறு தொழில்முனைவோர் நிதியின் வாயிலாக உதவி பெற்ற இவரில் ராஜலிங்கமும் ஒருவராவார். சிப்பாங்கிலுள்ள கேஜபி மால் கோத்தா வாரிசானில் நடைபெற்ற மாவட்ட நிலையிலான ஜெலாஜா சிலாங்கூர் பெனயாயாங் நிகழ்வில் இந்த உதவிப் பொருள்களை மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைத்தார்.

# பிரெஞ்சு பொது பூப்பந்துப் போட்டியில் பியர்லி டான்-எம்.தினா ஜோடி வெற்றி




கோலாலம்பூர்:--

தேசிய முதல் நிலை பூப்பந்து விளையாட்டாளர்களான பியர்லி டான்-எம். தினா ஜோடி நேற்றிரவு பாரிஸ், ஸ்டேட் பியர் டி கோபெர்டைனில் நடைபெற்ற பிரெஞ்சு பொது பூப்பந்துப் போட்டியில் வெற்றி பெற்று வரலாறு படைத்தனர்.

அவர்கள் இரண்டு முறை உலக சாம்பியனான ஜப்பானின் மயூ மாட்சுமோட்டோ-வகானா நாகஹாராவை 21-19, 18-21 21-15 என்ற செட் கணக்கில் தோற்கடித்து பிரஞ்சு பொது பூப்பந்து போட்டியில் வென்ற முதல் மலேசிய மகளிர் ஜோடி என்ற பெருமையைப் பெற்றனர்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற சுவிஸ் பொது பூப்பந்துப் போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்ற உலகின் 11ஆம் நிலை ஆட்டக்காரர்களான் இந்த ஜோடிக்கு கிடைத்த இரண்டாவது வெற்றி இதுவாகும்

மொத்தம் 72 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டம் இரு ஜோடிகளுக்கு இடையேயான முதல் போட்டியாக அமைந்தது.

முதல் செட்டில் பியர்லி-தினா ஜோடி ஆட்டத்தை மெதுவாக ஆரம்பித்தனர். ஆனால் விரைவில் 18-10 என்ற புள்ளிகளில் முன்னிலை வகித்தனர். இருப்பினும், வெற்றிப் புள்ளியைப் பெறுவதற்கு முன்பு ஜப்பானிய ஜோடி 20-19 என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலை வகித்தது மிகவும் பதட்டமான தருணமாக இருந்தது.

இருப்பினும், பியர்லி-தினா இரட்டையர்கள் முதல் செட் வெற்றியைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர். ஆட்ட வேகத்தைத் தக்கவைத்துக் கொண்ட போதிலும் மாட்சுமோட்டோ-நகஹாரா ஜோடியின் ஆட்ட பாணியை கணிக்கத் தவறியதால் இரண்டாவது செட்டில் 21-18 என்ற புள்ளிக் கணக்கில் பின்னடைவை எதிர்நோக்கினர். ஆனால், பின்னர் அந்த ஆட்டக்காரர்களின் ரிதம் மற்றும் ஆட்ட பாணியை கண்டறிந்து 21-15 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றுள்ளனர்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof
Hafiz Othaman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat, No.1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor**

*Tel : 03-55234856*
*Faks: 03-55235856*
*Email : info@mediaselangor.com*

## உயர் கல்விக் கூட மாணவர்களும், நிறுவனங்களை சேர்ந்தவர்கள் நவம்பர் 17 முதல் 24 வரை வாக்களிக்கலாம்



கோலாலம்பூர்:-

ஆசிரியர் கல்வி நிறுவனம், மெட்ரிக்குலேஷன் கல்லூரி, தொழிற்கல்லூரி மற்றும் படிவம்ஆறாம் மாணவர்கள் வீடுகளுக்குச் சென்று 15வது பொதுத் தேர்தலுக்கு (GE15) வாக்களிக்க நவம்பர் 17 முதல் 21 வரை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.மலேசியக் கல்வி அமைச்சகம் (KPM) இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 15வது பொதுத் தேர்தல் தேதி நவம்பர் 19 அன்று தேர்தல் ஆணையத்தின் அறிவிப்புக்கு இணங்க இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.‘‘இந்த விடுப்பு காலம் மாணவர்கள் அந்தந்த வாக்குச் சாவடி மையங்களுக்குச் செல்ல போதுமான நேரத்தை வழங்குகின்றது’’ என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.1 டிசம்பர் 2021 அன்று அரசாங்க பதிவேட்டில் வெளியிடப்பட்ட மற்றும் அதே ஆண்டு டிசம்பர் 15 முதல் நடைமுறைக்கு வந்த 18 வயதுக்கு மேற்பட்டோர் வாக்களிப்பை செயல்படுத்துவதற்கான ஆதரவின் அடையாளமாகவும் இந்த முடிவு இருப்பதாக கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. அந்த காலக் கட்டத்தில் மாணவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து வகுப்புகள் அல்லது செயல்பாடுகள் வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சிப்பாங்கில் 2038 வரை 4,665 சிலாங்கூர்கூ வீடுகள் நிர்மாணிக்கப்படும்



சிப்பாங்:-

சிப்பாங் செரேனியா சிட்டி திட்டத்தின் வாயிலாக 2022 முதல் 2038 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் பண்டார் செரேனியாவில் 4,665 சிலாங்கூர்கூ வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

இங்கு நடைபெற்ற ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் நிகழ்வில் அந்த வீடமைப்புத் திட்டத்திற்கான மாதிரி சாவிகளை ஒப்படைக்கும் நிகழ்வில் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கலந்து கொண்டார்.

இந்த திட்டம் தொடங்கப்பட்டது முதல் பண்டார் செரேனியாவில் 432 சிலாங்கூர்கூ வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு அடுத்தாண்டில் பொது மக்கள் அங்கு குடியேறுவதற்கு உரிய வாய்ப்பு ஏற்படும்.

இந்த நிகழ்வில் சிப்பாங் அமலியா 1 மற்றும் அமாலியா 2 திட்டங்களில் சிலாங்கூர் கூ வீடுகளை வாங்கிய 10 பேருக்கு மந்திரி புசார் அங்கீகாரக் கடிதங்களை வழங்கினார்.

மேலும், சிப்பாங்கில் ஸ்மார்ட் சேவா எனும் வாடகை கொள்முதல் திட்டத்தின் கீழ் 57 வீடுகளை சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் மேம்பாட்டு வாரியம் பெருமாஹான் டான் ஹர்த்தானா சிலாங்கூர் சென். பெர்ஹாட் நிறுவனத்திடம் ஒப்படைக்கும் நிகழ்வையும் மந்திரி பெசார் பார்வையிட்டார்.

கடந்த 2018 முதல் கடந்த நவம்பர் வரை 24,428 சிலாங்கூர் கூ வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

## சிலாங்கூர் அரசின் ஆயுள் காப்புறுதித் திட்டத்திற்கு பொது மக்கள் வரவேற்பு




கோம்பாக்:-

‘‘இன்சான்‘‘ எனப்படும் சிலாங்கூர் அரசின் ஆயுள் காப்புறுதி திட்டத்தின் வாயிலாக மாநிலத்திலுள்ள சுமார் 60 லட்சம் பேர் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் நலனுக்காக மாநில அரசு இதுவரை அமல்படுத்திய திட்டங்களில் இதுவே மிகச் சிறந்த ஒன்றாக கருதப்படுகிறது. நியாயமான கட்டணத்தில் காப்புறுதி பாதுகாப்பினை வழங்கும் மாநில அரசின் இத்திட்டத்தை தாம் பெரிதும் வரவேற்பதாக வணிகரான ஒஸ்மான் ஜமாலுடின் (வயது 51) கூறினார்.

எனக்கு பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளதையும் நான் பாதுகாப்பாக உள்ளதையும் உணர் கிறேன். இது உண்மையில் மிக அருமையான திட்டம் என அவர் குறிப்பிட்டார். வரும் அக்டோபர் மாதம் இந்த காப்புறுதி திட்டத்திற்கான பதிவு தொடங்கும் போது நானும் எனது குடும்பத்தினரும் விரைந்து பதிவு செய்யவுள்ளோம் என்றார் அவர்.

இதனிடையே, இந்த காப்புறுதித் திட்டம் குறித்து கருத்துரைத்த வணிகரான எஸ். குணசேகரன் (வயது 67), இந்த திட்டத்தை புத்ரா ஜெயாவும் மற்ற மாநிலங்களும் முன்மாதிரியாக கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மாநில நிலையில் இத்திட்டம் அமல்படுத்தப் படுவது இதுவே முதன் முறை என கருதுகிறேன். சிலாங்கூர் மாநில மக்களுக்கு கிடைக்கும் இந்த அனுகூலத்தை அனைத்து மக்களும் பெற வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் என்று அவர் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்த 60 லட்சம் பேர் பொது குழு காப்புறுதி சலுகையைப் பெறுவர் என மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி நேற்று முன்தினம் கூறியிருந்தார். இந்த திட்டத்திற்கு உண்டாகும் செலவு அனைத்தையும் மாநில அரசே ஏற்றுக் கொள்ளும் எனக் கூறிய அவர், பிறந்து 30 நாள் ஆன குழந்தை முதல் 80 வயது முதியவர் வரை இந்த காப்புறுதி திட்டத்தில் பங்கேற்கலாம் என்றார். இத்திட்டத்தில் பங்கேற்பதற்கு சிலாங்கூரில் பிறந்தவராகவும் சிலாங்கூர் வாக்காளராகவும் இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். 6,000 கோடி வெள்ளி மதிப்பிலான இந்த காப்புறுதித் திட்டத்திற்கான பதிவு வரும் அக்டோபர் முதல் தேதி தொடங்கவுள்ளது.

Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.